விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 24
ஒலி 028 வள்ளுவர் ஆண்டு 2054 தை 8 ஞாயிற்றுக்கிழமை (22.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## மார்ச் 9 தேர்தல்

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு



(கொழும்பு) உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இதற்கான அறிவிப்பை நேற்று சனிக்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## மாநகர முதல்வராக ஆனல்ட் பதவியேற்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய முதல்வராக இம்மானுவல் ஆனல்ட் நேற்று பதவியேற்றார்.

நேற்று முன்தினம் 19

## 10 ரூபாயினால் பாண் விலை குறைகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் 450 கிராம் 19

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்படும்

## ஜெய்சங்கருடனான கலந்துரையாடலின் பின் சம்பந்தனை சந்தித்து ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு) 13ஆவது திருத்தத்தில் கூறப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை சந்தித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை சந்தித்தபின் கூட்டமைப்பின் தலைவரை சந்தித்து ஜனாதிபதி ரணில் இதனைத் தெரிவித்தார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

### கோப்பாயில் நேற்றிரவு பயங்கரம்

## இளம் குடும்பஸ்தரை துரத்தி துரத்தி வெட்டிக் கொலை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மத்தியில் குடும்பத் தலைவர் ஒருவர் துரத்தி துரத்தி வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் இராசபாதை வீதியில் மோட்டார் சைக்கிள் திருத்தகம் (கராஜ்) நடத்தும் இராசபாதை 19

## யாழில் முக்கிய அரசியல் கட்சிகள் நேற்று வேட்புமனுத் தாக்கல்



### 7 வேட்புமனுக்கள் நிராகரிப்பு

### அரச அதிபர் சிவபாலசுந்தரன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் சிலவற்றின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட 19

### யாழ்.மாநகர சபையில்

## முதன்மை வேட்பாளர்களை அறிவித்த பிரதான கட்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர, சபை தமது முதல்வர் வேட்பாளர்கள் தொடர்பாக அறிவிப்பினை பிரதான கட்சிகள் வெளியிட்டிருக்கின்றன.

இதன்படி தமிழ்த் தேசிய கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் 19

## தேர்தலால் தெற்கில் பாரிய மாற்றங்கள் உருவாகும்

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தலில் தெற்கிலே பாரிய மாற்றங்கள் உருவாகலாம் என எதிர்பாக்கப்படுகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலின் வேட்பு 19

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

பல்லாயிரக்கணக்கில் மணமக்கள் எம்மிடம் உள்ளனர் மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

264, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596, 071 999 9306

(C-5828)


# கொடிகாமத்தில் கஞ்சாவுடன் கைதானவர் விளக்க மறியலில்

(கரணவாய்)

கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில் வியாபாரத்திற்காக 20 கிராம் 300 மில்லிக்கிராம் கஞ்சாவை வைத்திருந்த சந்தேக நபரை அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் ஏ.யூட்டன் நேற்று சனிக்கிழமை உத்தரவிட்டார்.

நேற்று சனிக்கிழமை மேற்படி பகுதியில் கஞ்சா விற்பனை செய்வதாக சாவகச்சேரி மதுவரி நிலையத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போதே விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம-7,60)


## விமலம் திருமண சேவை

விமலம் திருமணசேவை தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன் / மணமகள் தேவை எனின் எம்முடன் தொடர்பு கொள்ளவும். உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் தாராளமாக உள்ளன.

தொடர்பு : இலங்கை - 077 240 9276
கனடா - 001 437 244 6737 (14339)


## சிறுநீரகம் தேவை

18 வயதுடைய B+ குருதி வகையைச் சேர்ந்த ஆண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு B+ அல்லது O+ அல்லது O-Group வகையைச் சேர்ந்த சிறுநீரகத்தை தானமாக வழங்கக் கூடியவர் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
077 058 9057, 077 662 3286,
077 665 2487

(14346)


## Kids Park Elocution Center
## "English Through Feeling"

புதிய ஆண்டுக்கான முன்பள்ளி பிள்ளைகளான 3, 4, 5 வயது பிரிவினர்களுக்கும் தரம் 1 இலிருந்து தரம் 5 வரையான பிள்ளைகளுக்கும் தேவையானஆங்கில திறன்விருத்திப் பயிற்சிக்கான அரிய சந்தர்ப்பம். புதிய பிரிவு எதிர்வரும் 05.02.2023 இலிருந்து அனுமதிகள் வழங்கப்படுகின்றன.



புதிய அனுமதிகள் 2023

- தகுதி வாய்ந்த ஆங்கில பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் பேச்சு மற்றும் எழுத்து ஆற்றலுக்கான பயிற்சி.
- தகுதியான ஆசிரியர்களால் தரமான பயிற்சி சனி,ஞாயிறு தினங்களில் காலை 8 மணி தொடக்கம் 11 மணி வரை.

தரம் 9, 10 மற்றும் க.பொ.த. சா/த. மாணவர்களுக்கான ஆங்கிலம் மற்றும் ஆங்கில இலக்கியம் மீட்டல் வகுப்புக்கள்

பாடநெறி ஆலோசகர் சி.முகுந்தன்
ஆங்கில விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி. (14366)

முகவரி: இல.528, பலாலி வீதி, திருநெல்வேலி.
(பரமேஸ்வரா சந்திக்கு அருகில் பந்தி உணவகப் பக்கமாக)
தொ.பே. 0777 880 330, 0757 880 336


## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும்
வடமாகாண நீர்ப்பாசன பணிப்பாளர்
பணிமனை படவரைஞருமாகிய
**செல்வி.சி.வற்சாயினி** அவர்களின்
அன்புத்தாயார்.

அமரர் **சிவானந்தராஜா கனகதயானந்தி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (14361)

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம் – வடமாகாணம்.

## இறப்பு அறிவித்தல்

# காசிப்பிள்ளை சதாசிவம்

(முன்னாள் சிறைச்சாலை உத்தியோகத்தர்)



பிறப்பு:- 03.03.1930 இறப்பு: 18.01.2023

இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காசிப்பிள்ளை சதாசிவம் அவர்கள் கடந்த 18.01.2023 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் மகேஸ்வரன் காலஞ்சென்ற ஜெயலஷ்சுமி மற்றும் லோகேஸ்வரன், காலஞ்சென்ற தமிழரசுவரன் (மாவீரர் அர்ச்சுனா) மற்றும் சத்தியவாகிஸ்வரன், மங்களேஸ்வரன், திருக்கேதீஸ்வரன், திலகலக்சுமி, காலஞ்சென்ற நவலக்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் சித்ரா, சரஸ்வதி, லக்கினேஸ்வரி, நந்தினி, சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயலக்சுமி, அர்ச்சுனா, கஸ்தூரி, சுதந்தன், பிரியந்தன், மயூரன், அர்ச்சனா மயூரன், கீர்த்தனா, ஹரிஷ், விஸ்னா, கார்த்திகன், கபிலன், அபிராமினி, மதுரன் ஆகியோரின் பாசமிகு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2023) ஞாயிற்றுக்கிழமை இல.127/10, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.127/10, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்
தொடர்பு:- 076 692 6558

(14354)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு எதிரான இனவெறியை இலங்கை அரசு ஒருபோதும் நிறுத்தாது

## சீமான் ஆவேசம்

(சென்னை)


**இலங்கை அரசின் இனவெறி செயற்பாடுகளுக்கு எதிராகப் போராடிய மதத் தலைவர் வேலன் சுவாமிகளை கைது செய்தது அடிப்படை மனித உரிமைகளைப் பறிக்கும் கொடுஞ்செயல் என சீமான் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.**

யாழ்.நல்லூர் சிவகுரு ஆதீனத்தின் முதல்வரும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான தவத்திரு வேலன் சுவாமிகள் கைது செய்யப்பட்டமை தொடர்பில் பல்வேறு அமைப்பினரும் தமது கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

அந்த வகையில், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் தனது கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

மேலும், இலங்கை அரசின் இனவெறி செயற்பாடுகளுக்கு எதிராகப் போராடும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீது இலங்கையின் முப்படையினர் அடக்குமுறைகளைப் பிரயோகித்து வழக்குகள், கைதுகள் மூலம் ஒடுக்குவதும், அரசியல் அதிகாரங்களைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் மீது தாக்குதல் தொடுப்பது என இலங்கை இனவாத அரசால் அடிப்படை மனித உரிமைகளைப் பறிக்கும் செயல்கள் தொடர்ந்து நடந்து வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கையில் எந்த அரசு ஆட்சி அமைத்தாலும் யார் ஆட்சித் தலைவராக வந்தாலும் தமிழர்களுக்கு எதிரான இனவெறிக் கொடுமைகள் நிறுத்தப்படாது என்பதை வேலன் சுவாமிகளின் கைது உணர்த்துவதாக அவர் தெரிவித்துள்ளதுடன்,



ஒரே நாட்டிற்குள் தமிழர்களை ஒன்றிணைத்து வாழ்வது என்பது சாத்தியமற்றது என இப்போதாவது உலக நாடுகளும் ஐ.நா உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என சீமான் தனது கண்டன அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். (4)

# 2024 ஆம் ஆண்டில் இலத்திரனியல் கடவுச்சீட்டு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக கடந்த 2022 ஆம் ஆண்டின் இறுதிவரை 9 இலட்சத்து 11 ஆயிரத்து 693 பேர் கடவுச் சீட்டுக்களைப் பெற விண்ணப்பித்திருந்ததாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் ஹர்ச இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அதேவேளை கடவுச்சீட்டு விநியோகம் மற்றும் இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு விசா அனுமதிகளை வழங்க அறவிடப்பட்ட கட்டணங்கள் மூலம் குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு கடந்த ஆண்டு 20.1 பில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

கடந்த வருடம் 18.05 பில்லியன் வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அதனைவிட மேலதிகமான வருமானத்தை பெற முடிந்தது.

இரட்டைக் குடியுரிமை வழங்குதல் மற்றும் விமான நிலைய சேவைகள் மூலம் கிடைத்த வருமானத்தில் இந்த வருமானத்தைப் பெற முடிந்தது.

இதனிடையே எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தற்போது விநியோகிக்கப்படும் கடவுச்சீட்டு நவீனமயப்படுத்தப்பட்டு. இலத்திரனியல் வகை கடவுச்சீட்டை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கான தொழில்நுட்ப குழு நியமிக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட உள்ளன எனவும் ஹர்ச இலுக்பிட்டிய கூறியுள்ளார். (4)

# 8,000 ஆசிரியர்களை புதிதாக நியமிக்க தீர்மானம்

## கல்வி அமைச்சு

(கொழும்பு)

விஞ்ஞான பீடத்தில் டிப்ளோமா கற்கைநெறியை முடித்த 8,000 பேரை ஆசிரியர்களாக நியமிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் குறித்த துறைக்கு வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலைகளுக்கு இவர்கள் நியமிக்கப்படவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுடன் தொடர்புடைய பல பாடசாலைகளில் வெற்றிடங்கள் இருபபதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த கல்வி தவணைப் பருவத்திற்கு முன், இக்குழுவினர் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்திற்கு அரச ஆணைக்குழுவின் அனுமதியும் கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (4)

# மரண அறிவித்தல்

## திருமதி. இராசமணி கந்தசாமி



பிறப்பு 18.06.1930

இறப்பு 19.01.2023

வளலாயை பிறப்பிடமாகவும் நீராவியடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசமணி கந்தசாமி அவர்கள் 19.01.2023 வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி (ஓய்வுபெற்ற முகாமையாளர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி ஆச்சிமுத்து தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான நடராஜா - செல்லம்மா தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், ஆச்சிமுத்து, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் , பரமேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் குணேஸ்வரி, ராதாகிருஷ்ணன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சென்ஜேம்ஸ் ம.வி.- நிறுவுநர் "இலங்கை வேந்தன்" கலைக் கல்லூரி) காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் தர்மயோகேஸ்வரி (சுவிஸ்), கைலைநாதன் (ஜேர்மனி), ஸ்ரீஸ்கந்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் ஸ்ரீஸ்கந்தராஜா, சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), சிவசக்தி (ஓய்வுபெற்ற விரிவுரையாளர் - பலாலி , கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), ஜெயந்தி, சுரேஸ்குமார், கீதா, றோசி ஆகியோரின் அன்பு மாமியாரும், குகன் - பிரேமலா, லவன் (ஆசிரியர் வ/சண்முகானந்தா ம.வி) - ராஹினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் -வவுனியா), கேசவன் - தனுஷா, யசோதா - பிரதீபன், காண்டீபன் - அனுசா, யாழினி - மரியோ, மிருனாலினி - மகுமிலன், தனுசியா(ஆசிரியர் வ/ சைவப்பிரகாச வித்தியாலயம்)- நாகேந்திரராஜா, தர்ஷிகா (முகாமைத்துவ உதவியாளர் வவுனியா தெற்கு கல்வி வலயம்) - சஞ்சீவ் (உணவு மற்றும் மருந்து பரிசோதகர் மன்னார்), கோபிகா - கோகிலன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒட்டுசுட்டான்), அகலிகா - கிரிதரன், தமிழினி(ஆசிரியர் யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), மதுஷா - ரூபன், சாருஜன், சிவரூபன், அஜீபன், துவாரகா, மேகனன், மேகலி ஆகியோரின் ஆசைப்பேர்த்தியும் யுகன், அக்ஷா, கனிஷ்,அக்ஷதன், யுகானா, எழினா, சஜின் , எனோட், ஆதனா, யூலியன், சூரியன், நிலாவள்ளி, பவிக்ஷன், சேழினா, சாருக்ஷன், அனிஷா,நிதின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 77, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நாளை 23.01.2023 திங்கட்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(14357)

77, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல் குடும்பத்தினர்,
க.ராதாகிருஷ்ணன் - 077 7549 803

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி, பொலிஸ்...

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திடீரென கூட்டமைப்பின்தலைவர்களுக்கு ஜனாதிபதி சந்திக்க விரும்புகின்றார் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தன், சுமந்திரன், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் சம்பந்தனும் சுமந்திரனும் மட்டுமே சந்திப்புக்குச் சென்றிருந்தனர்.

தமிழர் தரப்புடன் அரசு நடத்தி வரும் தீர்வு தொடர்பான பேச்சுக்களில் அரசு வாக்குறுதியளித்த விடயங்களை நிறைவேற்ற கூட்டமைப்பு வழங்கிய ஒரு வார காலக்கெடு கடந்த 17ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. எனினும், வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை கொழும்பில் நேற்று முன்தினம் நண்பகல் சந்தித்த தமிழ்த் தலைவர்கள் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

சந்திப்பு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் எம்.பி.தெரிவித்ததாவது,.

"சந்திப்பில், அரச நிறுவனங்களால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பில் முதலில் கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழான திணைக்களங்களால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் குறித்து அவதானம் செலுத்தினோம். வன உயிரிகள், வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்திராவும் அங்கிருந்ததால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றோம்.

மாவட்ட ரீதியாக குறித்த திணைக்களங்கள் கையகப் படுத்தியுள்ள காணிகளின் விபரங்களை நாம் முன்வைத்தோம். அவற்றை மக்களிடம் மீளக் கையளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று அதிகாரிகள் கூறினர்.

குறுக்கிட்ட சம்பந்தன் ஐயா, காணிகளை எப்போது விடுவிப்பீர்கள் என்கிற காலவரையறையைக் கூறுங்கள். அவ்வாறில்லாமல் விடுவிப்போம் விடுவிப்போம் என்று சொல்வதால் பயனில்லை என்றார் காட்டமாக.

அதுமட்டுமன்றி, ஏற்கெனவே ஐந்து அரசியல் கைதிகளை விடுவிப்பதாக கூறியபோதும் 108 ஏக்கர் காணிகளை விடுவிப்பதாக இணங்கியபோதும் இன்னமும் எந்த விடயமும் நடைபெறவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இதையடுத்து, விடுவிக்கப்படக் கூடிய காணிகளின் விவரங்களை எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி அமைச் சரவை பத்திரமொன்றின் ஊடாக வெளிப்படுத்தி தொடர் நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

அதிகாரப்பகிர்வு விடயம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இந்த உரையாடலின்போது, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டோம். இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடனான சந்திப்பின்போது இந்த விடயத்தினை வலியுறுத்தியதையும் நாம் எடுத்துரைத்தோம்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, தேசிய காணி ஆணைக்குழு தொடர்பான சட்ட வரைவு தயாரிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார். அது நிறைவடைந்தவுடன் காணி அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவது குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்று தெரிவித்தார்.

அத்துடன் மாகாணங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர்களின் எண்ணிக்கையை 10ஆக வரையறுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒன்பது மாகாணங்களுக்கும் தலா ஒரு பிரதிப் பொலிஸ்மா அதிபரும், கொழும்பு மேற் றோ பொலிக்கன் பிரிவுக்கு ஒருவருமாக பத்து நியமனங்களாக வரையறுக்கப்படவுள்ளன. அதன் பின்னர் அவர்களை மாகாண நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்றார். (ம-7)


## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் சைவ உணவகம் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை.
**தங்குமிட வசதி, 3 நேர உணவு, விசேட சம்பள சலுகை.**
ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.



- உணவு பரிமாறுபவர் (சப்பிளையர்)
- பிரதான சமையலாளர்
- இடியப்பம் போடுபவர்
- தோசை போடுபவர்
- றொட்டி போடுபவர்
- மரக்கறி வெட்டுபவர்
- சுத்திகரிப்பாளர்
- மேற்பார்வையாளர் (மூன்று மொழித் தேர்ச்சி)
- பில் கிளார்க்
- உதவி வேலையாட்கள்
- அலுவலக உதவியாளர்

(14384)

7/3, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:-077 791 7753, 021 221 6633, 076 066 2999

அகரம் உயர் நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
மல்லாகம் கொக்குவில்
தரம் - 06
தமிழ் / ஆங்கில மொழிமூல மாணவர்களிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
(14362) நிர்வாகி


# தை மாத இராசி பலன்கள் 15.01.2023-12.02.2023

## கும்பம்

**எதையும் யோசித்து முடிவெடுக்கும் மனநிலையைப் பெற்ற கும்ப இராசி வாசகர்களே!**

தைமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி. சூரியன் மற்றும் சுக்கிரனுடன் சேர்க்கை பெற்று விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் விரயம் ஏற்படும். நினைத்தது ஒன்றும், நடந்தது ஒன்றுமாக இருக்கும். இல்லத்தில் உள்ளவர்கள் உங்கள் மீது குற்றம் சுமத்துவர். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அதிகரிக்கும். தன ஸ்தானத்தில் குரு இருப்பதால் அவ்வப்போது தேவைக்கேற்ற பணம் வந்து சேரும். மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி. ஏழரைச் சனியில் விரயச் சனியாகச் சஞ்சரிக்கிறார்.

அவரோடு சப்தமாதிபதி சூரியனும். 4. 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரனும் இணைந்திருக்கின்றனர். எனவே குடும்பச் சுமை கூடும். உறவினர்களின் முன்னேற்றம் கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். வாகனப் பழுதுகளால் வாட்டம் அதிகரிக்கும். ஆரோக்கியத் தொல்லைகளும் மருத்துவச் செலவுகளும் உண்டு. பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் தடைகளும் தாமதங்களும் ஏற்படும். "இடமாற்றம். வீடுமாற்றம் செய்யலாமா?" என்று சிந்திப்பீர்கள். தன ஸ்தானத்தில் வியாழன் சஞ்சரிக்கிறார். எனவே பணத் தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். 3 ஆம் இடத்தில் ராகுவும் பாக்கிய ஸ்தானத்தில் கேதுவுடன் சந்திரனும் சுஞ்சரிக்கின்றார்கள். இலாப ஸ்தானத்தில் புதனும் 4 ஆம் இடத்தில் செவ்வாயும் இருப்பதால் மாமன். மைதுனர் வழியில் உதவிகள் கிடைக்கும். இடம். பூமி விற்பனையால் லாபம் ஏற்படும். உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**சூரியன் - சனி சேர்க்கை**

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும் விரயாதிபதியாகவும் விளங்குபவர் சனி. அவரோடு சப்தமாதிபதி. சூரியன் இணைந்துள்ளார். பகைக் கிரகங்களின் இந்த சேர்க்கை அவ்வளவு நல்லதல்ல. குடும்பத்தில் சில குழப்பங்கள் தோன்றி மறையும். குடியிருக்கும் வீட்டால் சில பிரச்சினைகள் வரலாம். தொழிலில் பழைய பங்குதாரர்களை விலக்கிவிட்டு. புதியவர்களை சேர்த்துக் கொள்ளும் சூழல் உருவாகும். ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள். பணிபுரியும் இடத்தில் பணப்பொறுப்பில் இருப்பவர்கள் கவனமாக செயற்படுங்கள். சகப் பணியாளர்களால் சில தொல்லைகள் வரலாம். இடமாற்றம் இனிமை தராது. புதிய பொறுப்புகளை மேலதிகாரிகள் வழங்குவர்.

**கும்ப - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 4. 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன். தை 9 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசியிலேயே சுஞ்சரிக்கும் சுக்கிரனால், யோகமான பலன்கள் கிடைக்கும். குறிப்பாக தங்கம். வெள்ளி, ஆடை. ஆபரண சேர்க்கை உண்டு. புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான சூழல் உருவாகும். பாக்கிய ஸ்தானாதிபதியாக சுக்கிரன் இருப்பதால் பூர்வீக சொத்துக்கள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரலாம்.

**மகர - புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 5. 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன். தை 21 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். விரய ஸ்தானத்திற்கு புதன் சுஞ்சரிக்கும் பொழுது. பிள்ளைகளால் விரயங்கள் ஏற்படலாம். சுபவிரயங்களாகவே அமையும். 8 இற்கு அதிபதி 12 இல் சஞ்சரிக்கும் பொழுது. விபரீத ராஜயோகம் செயற்படும். எனவே திட்டமிடாமல் செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்கும். பொருளாதார நிலை உயரும் நேரம் இது. இம்மாதம் வைரவர் வழிபாடு வெற்றியைக் கூட்டும்.

## மீனம்

**சூழ்நிலைக்குத் தக்கவாறு குணத்தை மாற்றிக் கொள்ளும் மீன இராசி வாசகர்களே!**

தைமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு. உங்கள் இராசியிலேயே பலம் பெற்று சஞ்சரிக்கிறார். லாப ஸ்தானத்தில் சனி, சுக்கிரன், சூரியன் ஆகிய மூன்று கிரகங்களும் இணைந்து சஞ்சரிக்கின்றனர். இருப்பினும் 2 இல் ராகுவும் 8 இல் கேதுவும் இருப்பதால் வளர்ச்சிக்கு மத்தியில் தளர்ச்சி ஏற்படத்தான் செய்யும். வரவும் செலவும் சமமாகும். மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியில் குரு வீற்றிருந்து 5, 7, 9 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். 2 இல் ராகுவும் 8 இல் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். கேதுவோடு சந்திரன் இருப்பதால் மன அமைதிக் குறைவு ஏற்படும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. தொழில், உத்தியோகத்தில் இழப்புகளும் எதிர்பாராத மாற்றங்களும் உருவாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. சர்ப்பக் கிரக வழிபாடுகளை முறையாக மேற்கொள்வது நல்லது. லாப ஸ்தானத்தில் சூரியன், சனி, சுக்கிர சேர்க்கை இருக்கிறது. 10 ஆம் இடத்தில் புதன், 3 ஆம் இடத்தில் செவ்வாய் உள்ளது. எனவே உடன்பிறப்புகளின் வழியே ஒருசில உதவிகள் கிடைக்கலாம். இருப்பினும் பூர்வீக சொத்துப் பஞ்சாயத்துக்களில் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு குறையும். மாமன், மைத்துனர் வழியில் தொழில் வளர்ச்சிக்கான பொருளாதாரம் கிடைக்கும். இல்லத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

**சூரியன் - சனி சேர்க்கை**

உங்கள் இராசிக்கு 11, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. 6 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் சூரியன். இவை இரண்டும் ஒன்று கூடுவது யோகம் தான். எதிர்பாராத மாற்றங்கள் வந்து சேரும். இல்லத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். "விபரீத ராஜ யோக" அடிப்படையில் சில நல்ல பலன்கள் கிடைக்கலாம். உத்தியோகத்தில் எதிர்பாராத உயர்வும் நல்ல பொறுப்புகளும் கிடைக்கும். கட்டடம் கட்டும் யோகம் உண்டு. பணி ஓய்வு பெற்றவர்களாக இருந்தாலும் மீண்டும் பணியில் சேரும் வாய்ப்பு உருவாகும். சூரியன், சனியோடு சுக்கிரனும் இணைந்திருப்பதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். ஆபரணங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உங்களுக்கு தொல்லை தந்த மேலதிகாரிகள் மாற்றப்படலாம். நிலம் சம்பந்தப்பட்ட வழக்குகள் சாதகமாக முடியும்.

**கும்ப - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், தை 9 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கிறார். மறைவிடத்திற்கு அதிபதியான சுக்கிரன், மறைவிடமான 12 ஆம் இடத்திற்கு வருவது யோகம் தான். நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத்தேவைகள் பூர்த்தியாகும். அனைத்து வழிகளிலும் நீங்கள் செய்யும் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து பணிபுரிய அழைப்புகள் வந்து சேரும். உதிரி வருமானங்கள் வந்து உள்ளத்தை மகிழ்விக்கும்.

**மகர - புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், தை 21 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். லாப ஸ்தானத்திற்கு வரும் புதனால், யோகமான பலன் கிடைக்கும். பொருளாதார நிலை உயரும். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். தடுமாற்றங்கள் தானாக விலகும். வெளிநாட்டு வணிகம் ஆதாயம் தரும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். பணிபுரியும் இடத்தில் வீடுகட்ட. வாகனம் வாங்க, பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக உதவி கேட்டு விண்ணப்பித்திருந்தால் அது கைகூடும். இம்மாதம் நவக்கிரக வழிபாடு நன்மைகளை வழங்கும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக சுதந்திரம் இல்லாவிட்டால் நாட்டில் ஜனநாயகம் இல்லை

## முன்னாள் சபாநாயகர் கரு

(கொழும்பு)
ஊடக சுதந்திரம் இல்லாவிட்டால் நாட்டில் ஜனநாயகம் நிலவாது என முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரிய



தெரிவித்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட, தாக்குதலிற்குள்ளான பத்திரிகையாளர்களை நினைவுகூறும் நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஜனநாயக சமூகத்தில் சில உரிமைகளை சிலவேளைகளில் மட்டுப்படுத்தலாம். ஆனால் ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்த முடியாது என குறிப்பிட்டுள்ள அவர் நாட்டில் சுதந்திரம் இல்லாவிட்டால் ஜனநாயகம் நிலவாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இரண்டு நூற்றாண்டு பாரம்பரியத்தை கொண்ட முற்போக்கான ஊடக கலாசாரத்தை கொண்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையை பொறுத்தவரை கறுப்பு வரலாறும் உள்ளது. சகிக்க முடியாத துன்பியல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த சில தசாப்தங்கள் மிகவும் இருள்மிகுந்தவையாக காணப்பட்டன. இந்த யுகத்தில் பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்டனர், கொல்லப்பட்டனர், பழிவாங்கப்பட்டனர் என தெரிவித்துள்ளார். (4)

# மரண அறிவித்தல்

## அமரர். அல்லிராசன் பூரணம்



அராலி வடக்கு செட்டியார் மடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **அமரர்.அல்லிராசன் பூரணம்** அவர்கள் 20.01.2023 வெள்ளிக் கிழமை காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி மாணிக்கம் தம்பதிகளின் பாசமிகு மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான நாகன் பூரணம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும் அல்லிராசாவின் பாசமிகு மனைவியும் நாகமணி, மலர், காலஞ்சென்ற கமலா மற்றும் யோகராசா, செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரியும் விஜயலட்சுமி, பஞ்சசீலன், கருணாகரன், பூபாலசிங்கம், மகாலட்சுமி, இராசலட்சுமி, லட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் குமாரச்சந்திரன், ஜெனிற்றா , இந்திராணி, ஜெனிதா, சிவசோதி, சுபாகரன், காலஞ்சென்ற ராகுவன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மற்றும் விஜயபாஸ்கரன், டயானி, தனுசா, பாணு, பாமிலா, தர்மிலா, உசாந்தன், கௌசி, பிருந்தன், கவியரசன், கம்சன், றொசான், றொசானா, றொபினா, சோபனா, கிருசா, டர்சினி, துஸ்யந்தினி, ராகவன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் வர்சா, சாதனா, ரிகாஸ், ரிசானா, ஆரவ், ஆர்லின், கெலின் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.01.2023 இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(14350)

அராலி வடக்கு,
செட்டியார் மடம்.
0764285160
தகவல்
குடும்பத்தினர்.


# பணியாளர் தேவை

முன் அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதிகள்.
கணக்காளர் ஆண்/பெண்.
நானாவித அலுவலர்கள் தேவை.

(C-5827)

தொடர்பு
**076 315 6470**

# அலுவலக வேலை வாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் தனியார் அலுவலகம் ஒன்றிற்கு பெண் ஊழியர்கள் தேவை

தகைமை -O/L,A/L
கணினி அறிவு மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு:
077 448 1790 / 076 642 7915

**இல: 338,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்**
BS TRAVELS (PVT) LIMITED (14353)

# கடைத் தொகுதியுடன் கூடிய காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை தெல்லிப்பளை வீதியில் சங்கரத்தை சந்திக்கு அருகாமையில் க்டைத் தொகுதியுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

- உப பிரதேச சபை அலுவலகம். பொது நூலகம் முன்னால். பொது சந்தைக்கு அருகில்.
- பிரபல பாடசாலைகள். தொழில்நுட்ப கல்லூரி. தனியார் கல்வி நிறுவனாங்கள். மைதானங்கள். வங்கி என்பன அருகில்.
- கடைத் தொகுதிக்கு பின் புறம் மேலதிக கட்டிடம் அமைப்பதற்கு போதுமான இடம். கிணறு என்பன உண்டு.
- Food City போன்ற வியாபார நோக்கங்களுக்கு பொருத்தமான இடம்.


**கொள்வனவு செய்ய விரும்புவோர் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.**

**075 941 5626** (14343)



# இராசிபலன்

22.01.2023
தை 08, ஞாயிற்றுக்கிழமை
பிரதமை பின்னிரவு 1.08 மணிவரை
உத்தராடம் முற்பகல் 7.57 மணிவரை
திருவோணம் பின்னிரவு 6.20 மணிவரை
சுபநேரம்- 9.35-11.05 மணிவரை
இராகுகாலம் -5.05-6.35 மணிவரை
சந்திராஷ்டமம்
திருவாதிரை

வளவன்





சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், கனவு பலிதமுண்டு.





மனக்குழப்பங்கள் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




ஆரோக்கியத்தில் கவனம் தேவை,திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, பணியில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம்.





அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.





நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், உள்ள த்திலும் இல்லத்திலும் அமைதி கூடும் நாள்.




வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவ முண்டு.





வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், ஊக்கத்தோடும் உற் சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும்.





தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பாராட்டும் புகழும் கூடும் நாள், கற்பனை மிகுதியான நாள்.




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு,நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.




நீண்ட நேரம் பணி புரியும் சூழ்நிலை ஏற்படலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பெரியோர் களின் உதவி யால் சில நன்மைகள் இடம் பெறலாம்.




சிறிய வேலை யொன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.




அரசு தொடர்பான காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம். .

எதுவுமே இல்லையென்று சொல்பவன் சோம்பேறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரிக்கு முன் அரசியல் கைதிகளை விடுவிக்காவிட்டால் கறுப்புக்கொடி போராட்டம்

## சிவாஜிலிங்கம் எச்சரிக்கை



**(யாழ்ப்பாணம்)**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாத இறுதிக்குள் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும். அதை செய்யத் தவறின், ஜனாதிபதி வரும் இடமெல்லாம் கறுப்புக்கொடி போராட்டத்தை நடத்துவோம் என தமிழ்த்தேசிய கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.**

வேலன் சுவாமி கைது மற்றும் சமகால நிலைமைகள் தொடர்பில் கேட்டபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வேலன் சுவாமியை கைது செய்தமை காட்டுமிராண்டித்தனம். இவ்வாறெல்லாம் ஜனநாயக போராட்டங்களை அடக்க முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்.

அவ்வாறு விடுதலை செய்யத் தவறின், ஜனாதிபதிக்கு எதிராக அனைத்து இடங்களிலும் கறுப்புக்கொடி போராட்டம் நடத்துவோம்.

எங்களை எந்த சட்டத்தின் கீழும் கைது செய்யலாம். அதற்காக நாங்கள் அஞ்சப் போவதில்லை. எத்தகைய தடைகள் வந்தாலும் நாங்கள் அவற்றை தகர்த்து, எமது மக்களுக்காக எங்களுடைய ஜனநாயக ரீதியான போராட்டத்தை தொடர்ச்சியாக நாங்கள் நடத்துவோம்.

கடந்த நல்லாட்சிக் காலத்தின்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகவும் நாம் இத்தகைய போராட்டத்தினை மேற்கொண்டபோது சம்பவ இடத்துக்கு ஜனாதிபதி வந்து கலந்துரையாடிச் சென்றதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தமிழ் மக்களுக்கான நீண்டகால கோரிக்கைகள் பல இருந்தும், அதனை தீர்த்து வைக்காது வார்த்தை ஜாலங்களால் காலம் கடத்திவருகின்ற நிலையில், இனியும் நாம் பொறுமை காக்க முடியாது எனத் தெரிவித்தார். (4)

# எல்லை தாண்டிய மீன்பிடியை முழுமையாக கட்டுப்படுத்துங்கள்

## ஜெய்சங்கரிடம் டக்ளஸ் கோரிக்கை



(கொழும்பு)

இலங்கையின் கடல் வளத்திற்கும் இலங்கை கடற்றொழிலாளர்களுக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ள, இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் செயற்பாடுகளை முழுமையாக கட்டுப்படுத்த வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கருக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம், கடற்றொழில்-அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போதே, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேறுவதற்கும் இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்கள் உட்பட அனைத்து சவால்களையும் எதிர்கொள்வதற்கும் இந்தியாவின் உணர்வுபூர்வமான ஒத்துழைப்பு அவசியம் எனவும் தெரிவித்துள்ளார். (4)

# சைவப் புலவர்களுக்கு இன்று பட்டமளிப்பு

(சாவகச்சேரி)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினால் கடந்த 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடத்தப்பட்ட சைவப்புலவர் சங்கத் தேர்வில் சித்தியடைந்த 15 பேருக்கு இன்று ஞாயிற்றுக் கிழமை சைவப் புலவர் பட்டமளிப்பு வைபவம் இடம்பெறவுள்ளது.

இதேவேளை 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டு சைவப் புலவர் சங்கத் தேர்வுகளின் அடிப்படையில் 28 பேர் இளஞ் சைவப்புலவர் பட்டம் பெறவும் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பட்டமளிப்பு வைபவம் இன்று ஞாயிற்றுக் கிழமை சாவகச்சேரி பூமாரி மண்டபத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் வைரவிழா நிகழ்வின் போது இடம்பெறும் என சங்கத்தின் தலைவர் சி.கா.கமலநாதன் தெரிவித்துள்ளார். (4-30)

# கோண்டாவில் கிழக்கில் வன்முறைக் கும்பல் அட்டகாசம்

(அராலி)




கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் பகுதியில் வசித்து வந்த இருவரை நான்கு பேர் கொண்ட கும்பல் வீடு புகுந்து தாக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த குழு வீடு மற்றும் மோட்டார் சைக்கிளை சேதப்படுத்தி விட்டு வன்முறைக்குழு தப்பிச் சென்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-104)

## மனவளக்கலை யோகா பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் நேற்று இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகியது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை மாலை 5 மணி தொடக்கம் 7 மணிவரை எளியமுறை உடற் பயிற்சிகள், எளியமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ்நாட்டில இருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் R.K.விஜய நிர்மலா வழங்குவார். மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

# யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் விரைவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் 8 மணி வரை நடைபெறும் இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயில விரும்புவோர் வடமாகாணக் கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத் தளத்திலோ விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 06.02.2023 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கல்வி அமைச்சு வடமாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் அரச வேலைநாட்களில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு வடக்கில் எதிப்பு; தெற்கில் பலமடையும் ஐ.தே.க

அரசியல் ஞானம் என்பது அவ்வளவு சுலபமாக யாருக்கும் வந்து விடாது. இரத்தத்திலும் சதையிலும் அரசியல் ஊறியவர்களுக்கே அரசியல் ஞானம் இருக்கும். இதில் தென்பகுதி அரசியல்வாதிகள் வெற்றி பெற்றிருந்தாலும் எம் தமிழ் அரசியல் தலைவர்கள் எவருக்கும் அரசியல் ஞானம் - சாணக்கியம் இம்மியும் இல்லை என்றே கூற வேண்டும்.

இவர்களுக்கு அரசியல் ஞானம் இருந்திருக்குமாக இருந்தால் இன்று தமிழினத்திற்கு உரிமை கிடைத்து பல தசாப்தங்கள் கடந்திருக்கும்.

என்ன செய்வது? அவ்வாறான தலைவர்கள் தமிழினத்திற்கு வாய்க்கவில்லை என நொந்து கொள்வதை விட வேறு எதைச் செய்து விட முடியும்.

இங்கு நாம் இதைக் கூறும் போது பலருக்கு கோபம் வரலாம். கோபம் வந்து பயன் எதுவும் இல்லை. ஏனெனில் அதுதான் உண்மை. நடைபெறப்போகும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆளாளுக்கு கன்னை பிரிந்து நிற்பதே இதற்கு நல்ல உதாரணம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உடைத்த பெருமை தமிழரசுக் கட்சியையே சாரும். தமிழினத்தின் ஒற்றுமையை குலைத்ததாய் மக்கள் எண்ணுகின்ற போதிலும் இன்றுவரை அவர்கள் ஏன் கூட்டமைப்பில் இருந்து பிரிந்தோம் என்கிற தன்னிலை விளக்கத்தை வழங்கவில்லை.

இது ஒருபுறமிருக்க அரசியல் ஞானம் என்ற சொற்பதத்திற்கு வருவோமாக இருந்தால் தென்னிலங்கை அரசியல் தளம் மிகப் பலமானதாகவே உள்ளது.

அதிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் சாணக்கியத்தை இவ்விடத்தில் நாம் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை.

மிகக் கட்டுப்பாடும் மன உறுதியும் கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டமைப்பை உடைத்த பெருமை அவரையே சாரும் என்பதில் ஐயம் ஏதும் இல்லை.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மக்கள் எதிர்ப்பைத் தெரிவித்த போது அதைச் சாதகமாகப்பயன்படுத்தி ஜனாதிபதி பதவிக்கு வந்தவர் ரணில் விக்கிரமசிங்க.

பாராளுமன்றில் எதுவித பலமும் இல்லாத சந்தர்ப்பத்திலும் தனது சாணக்கிய அரசியலினால் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை விருப்புடன் ஜனாதிபதியானவர் ரணில் விக்கிரமசிங்க.

பாராளுமன்ற தேர்தலில் ஒரு ஆசனத்தைக்கூட பெற்றிராத ஐ.தே.கவின் தேசியப் பட்டியல் ஆசனத்தினூடே பாராளுமன்றம் சென்ற




ரணில், இனி ஐ.தே.கவின் ஆட்டம் சரி என பலரும் தப்புப்புக் கணக்கு போட்டதை உடைத்து சுக்கு நூறாக்கி ஜனாதிபதியானார்.

தான் ஜனாதிபதி ஆனதும் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறேன் என தமிழ் மக்களுக்கு வாக்குறுதி அளித்தது மட்டுமல்லாது தமிழ்க் கட்சிகளை கூட்டாகச் சந்திப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த வருட சுதந்திர தினம் இலங்கையின் இனங்களுக்கிடையிலான பிரச்சினையினை தீர்க்கும் சுதந்திர தினமாகும் என்ற அவரின் அறிவிப்பை கேட்டு மகிழ்வு கொண்டது தமிழ் மக்கள் மட்டுமல்ல, சிங்கள மக்களும் தான்.

ஏனெனில் அவ்வளவுக்கு போரினால் பல இன்னல்களை அனுபவித்து விட்டார்கள் இலங்கை வாழ் மக்கள்.

நிலை இதுவாக இருக்கையில், தமிழ்க்கட்சிகளைச் சந்திப்பதாக கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கை தமிழரசுக்கட்சி உறுப்பினர்களைச் சந்தித்ததும் குறித்த சந்திப்பின் பின் தமிழரசுக் கட்சி தனி வழியில் [illegible] எதிர்கொள்ளப் போவதாக அறிவித்திருந்ததும் நாம் அறிந்த விடயம்.

இலங்கை வரலாற்றில் ஆர்ப்பாட்டமில்லாத அமைதியான தலைவர் என்றால் அது ரணிலைச் சாரும். அவ்வளவுக்கு மென்போக்கு அரசியலைக் கொண்டவர் ரணில் விக்கிரமசிங்க.

கடந்த வாரம் தேசிய பொங்கல் விழாவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் கொண்டாடியிருந்தார். இங்குதான் நாம் ஒரு விடயத்தை கவனிக்க வேண்டும்.

ஒரு காலத்திலும் இல்லாத எதிர்ப்பு இம்முறை ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்.வருகைக்கு ஏற்பட்டிருக்கின்றதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நெருங்கும் இவ்வேளையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் நடுவு நிலை என அறிவித்திருந்தாலும் அவரின் செயற்பாடுகள் ஐ.தே.கவை பலம் பொருந்திய கட்சியாக மாற்ற முனைவது புரிகிறது.

ஆம், தமிழினத்திற்கான தீர்வு விடயத்தில் தீவிரம் காட்டாமல் இருப்பதனால் தாம் வடக்குக்கு விஜயம் செய்தால் எதிர்ப்பை சந்திப்பேன் என்ற விடயத்தை அறிந்து கொள்ளாத அளவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவ்வளவு அரசியல் ஞானம் இல்லாதவர் அல்ல.

தேசிய பொங்கல் தினத்தை வடக்கில் ஏற்பாடு செய்து அங்கு செல்லும் போது ஜனாதிபதிக்கு மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினால் அது தெற்கில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை இங்கு நாம் கவனித்தே ஆக வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான எதிர்ப்பு ஐ.தே.கவை பலம் பெற வைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

> ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக வடக்கில் எழுந்த எதிர்ப்பு தெற்கில் ஐ.தே.க வை பலமடையச் செய்யும். அதே வேளை ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின் தமிழ்க்கட்சிகள் பிரிந்து பலமிழந்து நிற்கின்றன என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அட ரணிலுக்கும் வடக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள் என்ற தோற்றப்பாட்டை குறித்த எதிர்ப்பு ஏற்படுத்தியிருக்கிறது என்பதுதான் மறுக்க முடியாத உண்மை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்.வருகைக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பாரிய எதிர்ப்பைத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டவர்கள் மீது பாதுகாப்பு தரப்பினர் நீர்த்தாரை பிரயோகத்தை மேற்கொண்டு அவர்களை அப்புறப்படுத்த முற்பட்டிருந்தனர். ஆயினும் ஆர்ப்பாட்டக்காரர்களின் எதிர்ப்பை அரச தரப்பினால் எதுவும் செய்துவிட முடியவில்லை.

குறித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் நிச்சயம் ஐ.தே.கவை பலமடையச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

தன்மீது காலத்தில் இல்லாத எதிர்ப்பை வடக்கு மக்களிடம் ஏற்படுத்தி அதனூடே தெற்கில் தன்மீதும் தன் கட்சி மீதும் அதிர்வலைகளை ஏற்படுத்த முற்பட்டிருந்த ரணிலின் அரசியல் சாணக்கியம் வெற்றி பெற்று விட்டது.

ஆனால் ஒன்றாய், ஒற்றுமையாய் பலத்துடன் இருந்த எமது அரசியல் தளம் உடைக்கப்பட்ட கண்ணாடித் துண்டுகளாய் பிரிந்து நின்று விம்பம் காட்டுகிறது.

இது பலம் அல்ல. எம் பலவீனம். எமது அரசியல் சாணக்கியம் அற்ற வெறுமை நிலை என்பதை நடக்கப்போகும் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் முடிவுகள் எடுத்தியம்பும் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## தமிழரசுக் கட்சியிலும் உள் வெடிப்பு ஏற்பட்டதோ?

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர். தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீனத்தின் குருமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சைவ சமயத் துறவி ஒருவரைப் பொலிஸார் கைது செய்த்மை சைவ சமயத்தை நிந்தைப்படுத்துவதாகும் எனக் கூற, கண்டனத் தீர்மானம் ஆலடி மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து ஆலடியில் சிறிதுநேரம் அமைதி நிலவியது. அமைதியைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** சிவபூமி அறக்கட்டளை அமைப்பு மலையகத்தில் சிவபூமி ஆச்சிரமமொன்றை அமைத்து அதன் திறப்பு விழாவை கடந்த 18 ஆம் திகதி நடத்தியிருந்தது. மலையகத்தில சிவபூமி ஆச்சிரமம் அமைக்கப்பட்டமை உண்மையில் வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

மலையகச் சகோதரர்கள் இன்னமும் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அவர்களுக்கு உதவி செய்வது எங்களின் தார்மீகக் கடமை. அந்த வகையில் சிவபூமி ஆச்சிரமம் அங்கு அமைக்கப்பட்டிருப்பது மலையகத் தமிழ் மக்கள் எங்களின் சகோதரர்கள் என்பதை அழுத்திச் சொல்கிறது. இந்த நல்ல பணியைச் செய்த சிவபூமி அறக் கட்டளை நிறுவுனர் கலாநிதி ஆறு திருமுருகனாருக்கு ஆலடி மாநாட்டில பாராட்டுத் தெரிவிக்கின்றோம்.

அவரின் இந்த முயற்சி எங்களதும் மலையகத் தமிழ் மக்களதும் உறவை மேலும் வலிமைப்படுத்தும் என்பதோடு, எங்கள் புலம்பெயர் உறவுகளும் மலையக மக்களின் கல்வி மற்றும் வாழ்வாதாரத்திற்கு உதவ வேண்டும் என்ற கோரிக்கையையும் ஆலடி மாநாட்டில முன்வைக்கின்றோம்.

இவ்வாறு விதானையார் விசுவலிங்கம் கூறியதும் அதனை ஆலடியில இருந்த அனைவரும் தலை அசைத்து ஏற்றுக் கொண்டனர்.

**கங்காணி:** அதுசரி, உள்ளூராட்சி சபைத் தேர்தல் நிலைமை எப்படி இருக்குது.

**மூப்பர்:** பொதுவில தேர்தல் எண்டால் கட்சிகள் கூட்டுச் சேர்வது தான் வழக்கம். ஆனால் எங்கட தமிழ் அரசியலிலதான் தேர்தல் எண்டதும் கட்சிகள் பிரிந்து போவதைக் காண முடிகிறது.

**சாத்திரியார்:** ஓ! நல்லது கெட்டது நடக்கும் போது தானே உறவு ஆரு பகை யாரு என்பது தெரிய வரும். அதுபோல, தேர்தல் வந்தால் தானே அரசியல் -கட்சிகளுக்குள்ள இருக்கிற நட்பும் பகையும் வெளியில தெரிய வரும்.

எதுவா இருந்தாலும் இந்தமுறை தமிழ் அரசியல் கட்சிகள் ஒரு பாடம் படிக்கும் என்பதுதான் என்ர கணிப்பு.

**சிறாப்பர்:** அதுசரி தேர்தலுக்குப் பின்னர் ஒன்றுசேரலாம் எண்டு தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா கூறியிருக்கிறார். அதின்ர பொருள் என்ன?

**விதானையார்:** விவாகரத்து எடுத்துப் போட்டு கணவன்-மனைவியாக இருப்பம் எண்டு சொல்லுறார்.

**வாத்தியார்:** என்னவா இருந்தாலும் இந்த இடத்தில மாவையார் மௌனம் காத்திருக்க வேணும்.

**பண்டிதர்:** ஏன் வாத்தியார் அப்படிச் சொல்லுறியள்.

**வாத்தியார்:** தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைக் குலைச்சதில மாவையாருக்கு எந்தப் பங்கும் இல்லை. ஆரோ கூட்டமைப்பைக் குலைக்க, அதற்கு இன்னொருவர் நியாயம் கூற முற்பட்டால், அவர்தான் கூட்டமைப்பைக் குலைச்சவர் எண்டு மக்கள் கருதுவினம். அதாலதான் சொன்னனான் மாவையர் மௌனம் காக்க வேணுமெண்டு.

**விதானையார்:** உண்மைதான். பேச வேண்டிய நேரத்தில பேச வேணும். பேசாமல் இருக்க வேண்டிய நேரத்தில பேசாமல் இருக்க வேணும்.

ஆனால் பேச வேண்டிய நேரத்தில மாவையர் பேசாமல் இருக்கிறதால இப்ப கட்சிக்குள்ளயும் வெடிப்புகள் ஏற்படத் தொடங்கியிருக்குது.

**பண்டிதர்:** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:** இந்தாப் பாருங்க, கிளிநொச்சி மாவட்டத்தில உள்ளூராட்சி சபைத் தேர்தலில தமிழரசுக் கட்சியும் தமிழரசுக் கட்சியின்ர சுயேட்சைக் குழுவும் களமிறங்கி இருக்குது.

தமிழரசுக் கட்சியின்ர வேட்புமனுத் தாக்கல சிறீதரன் எம்.பியும் சுயேட்சைக் குழுவில சுமந்திரன் எம்.பியும் தலைமை தாங்கிறதாகக் கேள்வி.

**மூப்பர்:** அட, நாசமறுப்பு. அப்ப தமிழரசுக் கட்சிக்குள்ளயும் உடைவு ஏற்பட்டிட்டுதோ.

**வாத்தியார்:** இஞ்சே மூப்பர் நோக்கம் வித்தியாசப்பட்டால், எந்த அமைப்பும் நீண்ட காலத்திற்கு நிண்டு பிடிக்க முடியாமல் போகும்.

இந்தாப் பாருங்க எல்லாரும் தமிழ் மக்களின் உரிமை, தமிழ் மக்களின் சுதந்திரம் எண்டுதான் வெளிக்கிட்டவியள். ஆனால் அவர்கள் தங்கட பயண இலக்கை அடையக் கூடிய பாதையைத் தவிர்த்து, தங்கட நலனுக்கு உகந்த பாதையைத் தெரிவு செய்தால், பயணம் மாறும் தானே. அதுதான் எங்கட தமிழ்த் தரப்பில நடந்தாகுது.

**சிறாப்பர்:** அப்ப வாத்தியார் அரசாங்கம் தன்ர இலக்கை அடைஞ்சு போட்டுது எண்டு சொல்லுறியள்.

**வாத்தியார்:** சிறாப்பர் இதுதான் எங்கட பிழை. எங்கட தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களுக்கு விசுவாசமாக நடந்தால், ஏன் இந்தப் பித்தலாட்டங்கள் நடக்கப் போகுது.


உள்ளொன்றும் புறமொன்றுமாக செயற்பட்டால் அதின்ர உண்மைத் தன்மை நிச்சயம் வெளிப்பட்டுத்தான் ஆகும்.

அதாலதான் உள்ளொன்று வைத்து, புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்...என்று வள்ளலார் சுவாமிகள் பாடியிருக்கிறார்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய பொங்கலுக்கு வந்த ஜனாதி பதியை எதிர்த்தவர்களுக்கு நீர்த்தாரை ப்பிரயோகம் செய்தது சரியா?

**மோகன் — கொக்குவில்**

**அன்பு வியாசரே யாழ்ப்பாணத்தில் நடந்த பொங்கல் செலவு எவ்வளவு இருக்கும்?**

பொங்கல் செலவு எவ்வளவாய் இருந் தால் எமக்கென்ன பொங்கி முடிந்தது. எம்மவர்களின் பொங்கலும் முடிந்தது.
வடக்கிற்கு வந்தவரை பொங்க விடாமல் பொங்கி எதிர்த்தவையாம் பொங்கு தமிழ்காரர் என்று தெற்கில் அவர் பெயர் பொங்கி எழுந்திருக்கும்.
ஆனால் தமிழ் சனங்கள் வாசலில் பொங்கல் பொங்கவில்லை இதை யாரும் உலகிற்கு சொல்லவில்லை.
இந்தப் பொங்கல் பொங்காமலே பொங்கி விட்டது.

**சத்ருக் — மானிப்பாய்**

**தாயா-தரமா சிறந்தவர்?**

இந்தக் கேள்விக்கு பதில் எழுதிவிட்டு நான் வீட்டுக்குப் போகும் தைரியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.ஆயினும் சொல்கிறேன்.
தாய் இதயம் எனின் தாரம் நுரையீரல் போன் றவள். ஒரு மனிதனுக்கு இந்த இரண்டும் கட்டாயம் தேவையானது.
தாய் என்ற இதயம் கெட்ட இரத்தத்தை சுத்திகரித்து தூயதாக்கி உயர்ந்து நிற்கும்.
தாரம் என்ற நுரையீரல் நல்ல காற்றை உள் எடுத்து அசுத்தக் காற்றை வெளிவிட்டு மேலோங்கி நிற்கும்.
இது இரண்டில் ஒன்று செயல் இழந்தாலும் மனிதனால் உலகில் உயிருடன் வாழ்ந்து விட முடியாது.
இதில் தந்தையை விட்டுவிட்டீர்களே.அவர் தான் மூளை அவர் நினைத்தது தான் நடக்கும் நடக்க வேண்டும்.

**ஆர்.கே.எஸ் — யாழ்ப்பாணம்**

**உனக்குப் பிடித்தது எனக்கும் பிடிக்கும் என்றாள் அவள். இப்போது என்னை விட்டு விட்டுப் போய்விட்டாள் வியா சரே?**

நன்றாக சிந்தித்துப் பார். உனக்குப் பிடித் தது தான் தனக்கும் பிடிக்கும் என்று தானே கூறினாள். அவள் கூறியதில் ஒரு தவறும் இல் லையே.
உனக்கு உன் சிநேகிதன் X ஐ நிறைய பிடிக்கும் என்பது அவளுக்கும் தெரிந்து விட்டது.
அதனால் உனக்குப் பிடித்த X ஐ அவ ளுக்கும் பிடித்துவிட்டது.
கிளி கூட்டைவிட்டு பறந்துவிட்டது. பீல் பண் ணாமல் அடுத்தகிளியைப் பிடிக்கப்பார். அதை வாழ்க்கையில் நிலைக்கப்பார்.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சுதன் — குப்பிளான்**

**வேலன் சுவாமிகளின் விடுதலையில் காட்டும் ஒற்றுமையை ஏன் தமிழர் அரசியலுக்காக பயன்படுத்தக் கூடாது?**

தம்பி சுதன் வடை சாப்பிட கடைக்கு வந்தால் வடையைச் சாப்பிட்டுவிட்டுச் செல்வது தான் உமக்கும் உடலுக்கும் நல்லது.
அதைவிட்டு விட்டு உளுந்து அரைத்தது யார்? அடுப்பை மூட்டியது யார்? சட்டியை அடுப்பில் வைத்தது யார்? எண்ணை ஊற்றி யது யார்? வடையை தட்டியது யார்?
அதற்கு ஓட்டை போட்டது யார்? இவ்வாறு எல்லாம் கேள்விகள் கேட்கக் கூடாது.அது அவ்வளவு நல்லதல்ல.

**சு.ஜெயரூபன் — பருத்தித்துறை**

**பெண்கள் கூந்தலில் இயற்கையிலேயே மணம் உண்டா வியாசரே?**

சிவனுக்கும் நக்கீரருக்கும் நடந்த சண்டையே இது தானே.
நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என சிவனை எதிர்த்து பெண்களின் கூந்த லுக்கு இயற்கையாக மணம் இல்லை என வாதிட்டு சோதியில் கலந்தார் நக்கீரர்.
அது சிவனுடனான சண்டை. இதைச் சொல்லி நான் என் மனைவியிடம் அடி வாங்கவா அடபோடா ஜெயரூபா.



பெண்கள் கூந்தலில் இயற்கையிலேயே மணம் உண்டா வியாசரே?

**தாரா — வதிரி**

**உலகம் ஒரு நாடக மேடை எனின் ரசிகர்கள் யார் வியாசரே?**

உலகம் ஒரு நாடக மேடை இதில் ஒவ்வொரு மனிதரும் நடிகர்கள்.
மரம், செடி, கொடிகள் காட்சிப் பொருட்கள் காற்று இசையமைப்பாளர், பகலும் இர வும் ஒளிபரப்பாளர்கள்.
அட இவ்வளவும் இருந்தும் பார்வையாளர் களைக் காணவில்லையே என பார்க்கிறீர்.
இறைவன் தான் பார்வையாளன்.அவன் பார்வையாளன் மட்டுமல்ல. உலக நாடகத்தின் கதை,திரைக்கதை, வசனம், இசை, ஒலிப்பதிவு இவை அனைத்தையும் இயக்குவதும் அவனே.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**தேசிய பொங்கலுக்கு வந்த ஜனாதி பதியை எதிர்த்தவர்களுக்கு நீர்த்தாரை ப்பிரயோகம் செய்தது சரியா?**

தேர்தல் நெருங்கும் நேரம் பொங்கலும் நெருங்கி வர பொங்கிடுவோம் வடக்கில் பொங்கலை என பொங்கிவந்தார்.
எங்கள் இடத்தில் உங்களுக்கென்ன பொங்கலென்று பொங்கி எழுந்த எங்க ளவரை பொங்கித் தடுத்தனர் பொறு ப்பதிகாரிகள்.
நீர்வளம் குறையுது என்று தெரிந்தும் நீரைப் பீச்சியடித்து தாரை தாரையாய் பிரிக்கப் பார்த்தவர்.
எதிர்பார்த்திருக்க மாட்டார் அவர்கள் சம்போ போட்டுக் குளித்திடுவார்கள் என்று.

**இந்து — கொடிகாமம்**

**உள்ளூராட்சி சபைத் தேர்தல் எப்படிப் போகும் வியாசரே?**

இனித்தான் குத்து வெட்டு நிறையப் பார்க்கப்போகிறீர்கள்.
கூட்டைப் பிரித்து தனி வழி சென்றவர்கள் தனி அணி அமைத்து தனி வழி செல்ல உள்ளார்களாம்.
இனி என்ன அணி அணியாய்ப்பிரிந்து அடுத்தவர் குறைபேசி அவர் இனிதே இவர் இனிதே என பிணி பல சொல்லி கனி அமுதே எம் கண்டிடேட் என்று அளப்பறைகள் விட்டு ஓட்டுக்கள் வாங்க தம் ஓட்டைகளை அடைத்திடுவார்.
திருக்கை வாலெடுத்து முதுகுச் செதிள் கழட்ட ஆள் இல்லாததன் விளைவே இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: குடும்பத் தலைவன்
பாடியவர்: பி. சுசீலா
இயற்றியவர்: கண்ணதாசன்
இசை: கே.வி. மஹாதேவன்



மழை பொழிந்து கொண்டே இருக்கும்
உடல் நனைந்து கெ?ண்டே இருக்கும்
மனம் நிறைந்து நிறைந்து
எண்ணம் வழிந்து வழிந்து
உயிர் மிதந்து கொண்டே இருக்கும்

மழை பெ?ழிந்து கொண்டே இருக்கும்
உடல் நனைந்து கொண்டே இருக்கும்
மனம் நிறைந்து நிறைந்து
எண்ணம் வழிந்து வழிந்து
உயிர் மிதந்து கொண்டே இருக்கும்

மழை பொழிந்து கொண்டே இருக்கும்
உடல் நனைந்து கொண்டே இருக்கும்

உள்ளம் துடித்துக் கொண்டே இருக்கும்
கண்கள் விழித்துக் கொண்டே இருக்கும்
உள்ளம் துடித்துக் கொண்டே இருக்கும்
கண்கள் விழித்துக் கொண்டே இருக்கும்
தென்றல் தழுவிக் கொண்டே வரும்
இரவைக் கண்டே பெண்மை
தவித்துக் கெ?ண்டே இருக்கும்

மழை பெ?ழிந்து கொண்டே இருக்கும்
உடல் நனைந்து கொண்டே இருக்கும்

இன்று கூட்டுக்குள்ளே இருக்கும்
நாளை வீட்டுக்குள்ளே இருக்கும்
இன்று கூட்டுக்குள்ளே இருக்கும்
நாளை வீட்டுக்குள்ளே இருக்கும்
எங்கள் கூட்டுக்குரல் இன்பக்
கே?ட்டைக்குள்ளே என்றும்
கேட்டுக்கொண்டே இருக்கும்

மழை பெ?ழிந்து கொண்டே இருக்கும்
உடல் நனைந்து கொண்டே இருக்கும்
மனம் நிறைந்து நிறைந்து
எண்ணம் வழிந்து வழிந்து
உயிர் மிதந்து கொண்டே இருக்கும்
மழை பெ?ழிந்து கொண்டே இருக்கும்
உடல் நனைந்து கொண்டே இருக்கும்

# 'அட்ரஸ் இல்லாத அல்-கொய்தா!'

**30 ஆண்டுகளுக்கும் மேலாக, மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றில் கிளைபரப்பி, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குல கநாடுகளை அச் சுறுத்தி வந்த அல்-கொய்தா, இன்று தடயமின்றிக் கிடக்கிறது. பயங்கரவாதப் பாதையில் பயணிக்கும் இயக்கங்களின் முடிவு இப்படித் தான் இருக்கும் என்பதற்கு அல்கொய்தா சிறந்த உதாரணம்!**

அமெரிக்க இரட்டைக் கோபுரத்தைத் தகர்த்து உலகத்தையே அலற விட்ட அமைப்பு அல்-கொய்தா. இன்று அது தடயமில்லாமல் முடங்கிக் கிடக்கிறது. அந்த இயக்கத்தின் தலைவர் அய்மன் அல் - ஜவாஹிரி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, புதிய தலைவர் பற்றிய எந்த அறிவிப்பும் இல்லாமல் அல்-கொய்தா மௌனம் காப்பது பல்வேறு யூகங்களுக்கு வழி வகுத் திருக்கிறது!

2001 ஆம் ஆண்டு, அமெரிக்காவில் 3,000 பேரைப்பலி கொண்ட உலக வர்த்தகமைய் இரட்டைக் கோபுரத் தாக்குதலில், முதன்மைக் குற்றவாளியான அல்-கொய்தாவின் தலைவர் ஒசாமா பின்லேடன், 2011-ல் அமெரிக்கப் படைகளால் பாகிஸ்தானில் வைத்துக் கொல்லப்பட்டார். அதன் பின்னர், ஒசாமாவுக்கு வலது கரமாகச் செயல்பட்ட அய்மன் அல்-ஜவா ஹிரியைத் தங்கள் தலைவராக நியமித்தது அல்-கொய்தா. அமெரிக்காவின் பல்வேறு தாக்குதல் களிலிருந்து பல ஆண்டுகளாகத் தப்பி வந்த ஜவாஹிரி 2022, ஜூலை 31-ம் திகதி ஆப்கனில் வைத்து அமெரிக்கப் படைகளால் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் நடந்து ஆறு மாதங்களுக்கு மேலாகியும், அல்-ஜவாஹிரி மரணம் குறித்த எந்த விளக கத்தையும் அல்-கொய்தா கூற வில்லை. மேலும், தங்கள் அமைப்புக்கு புதிய தலைவர் யார் என்பது குறித்த அறிவிப்பையும் அது வெளியிடவில்லை. ஒசாமா மரணத்துக்குப் பிறகு ஜவாஹிரியைத் தலைமைப் பொறுப்பில் அமர்த்தி, தன்னைப் புதுப்பித்துக் கொண்ட அல்-கொய்தா, தற்போது ஜவாஹிரி மரணத்துக்குப் பிறகு இருக்குமிடமே தெரியவில்லை.

**'சதித்திட்டங்களைச் செயல்படுத்தி விடாதீர்கள்!" - தாலிபன்களின் கட்டுப்பாடு!**

தாலிபன்களின் ஆதரவு நிழலில் தான் ஆப்கனில் அல்-கொய்தா அமைப்பு வளர்ந்தது. இந்த ஆதரவு நிலைப்பாடுக் காகத் தாலிபன்கள் கொடுத்த விலை அதிகம். அந்தத் தவற்றை மீண்டும் செய்து விடக் கூடாது என்பதில் தெளிவாக இருக்கும் தாலிபன் அமைப்பினர், 2021 இல் ஆப்கனில் ஆட்சியமைத்த பின்னர், 'எங்கள் நாட்டில் அடைக்கலம் இருங்கள். ஆனால், எங்கள் நாட்டிலிருந்த படி எந்தச் சதித் திட்டத்தையும் செயல்படுத்தி விடாதீர்கள்!" எனஅல்-கொய்தாவுக்குக் கட்டுப்பாடு விதித்தனர். இதுபற்றி, பொருளாதாரத் தடைகளைக் கண்காணிக்கும் ஐ.நா-வுக்கான குழுவொன்று, "ஆப்கானிஸ்தானிலிருந்து வெளிப்புறத் தாக்குதல்களைத் திட்டமிட அல்-கொய்தாவுக்கு தாலிபன் தடை விதித்திருக்கிறது" எனக் கடந்த ஜூலை மாதம் அறிவித்தது. இந்தக் கட்டுப் பாடுகளால், அல்-கொய்தா தனது துணை தீவிரவாதக் குழுக்களுடன் மீண்டும் ஒருங்கிணைய முடியாமல் போனது.

இதுபற்றி அமெரிக்க தேசியப் பாதுகாப்பு கவுன்சில் செய்தித் தொடர்பாளர் அட்ரியன் வாட்சன், "ஆப்கானிஸ்தானில் அல்-கொய்தா மறுசீரமைக்கப்படவில்லை. அந்த அமைப்பின் முக்கியத் தலைவர்கள் ஒரு டஜனுக்கும் குறைவான எண்ணிக்கையிலேயே ஆப்கானிஸ தானில் இருக்கிறார்கள்" என்த திட்ட வட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

ஜவாஹிரி உயிருடன் இருக்கும் போதே, அவரது மோசமான உடல் நிலை காரணமாக, அல்-கொய்தாவுக்கு அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுத்தாக வேண்டிய தேவை அந்த இயக்கத்துக்கு ஏற்பட்டது. 2017 ஆம் ஆண்டு, ஒசாமாபின்லேடனின் மகனான ஹம்சாபின்லேடனை அல்-கொய்தாவின் தலைவராக, ஜவாஹிரி நியமிக்க விருப்பதாக அதிகார பூர்வத் தகவல்கள் வெளியாகின. சுதாரித்துக் கொண்ட அமெரிக்கா, ஹம்சாபின்லேடனையும் வான் வழித்தாக்கு தலின் மூலம் கொன்றழித்தது. இந்தச் சம்பவம் அல்-கொய்தாவின் எதிர் காலத்துக்குச் சம்மட்டி அடி கொடுத்தது.

**அல்-கொய்தாவின் அடுத்த தலைவர்யார்?**

ஜவாஹிரியும் கொல்லப்பட்ட நிலையில், தற்போது அல்-கொய்தாவுக் குசைஃப் அல்-அடெல் தலைமை தாங்க விருப்பதாகத் தகவல்கள் வருகின்றன. எகிப்து நாட்டின் முன்னாள் ராணுவ அதிகாரியான சைஃப் அல்-அடெல், அல்-கொய்தா அமைப்பைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர். ஒரு காலத்தில் ஒசாமா பின்லேடனின் தலைமைப் பாதுகாப்பு அதிகாரியாகவும் இருந்திருக்கிறார். 2001 முதலே அமெரிக்காவின் தேடப்படும் குற்றவாளி. 1993இல் சோமாலியாவிலுள்ள அமெரிக்க ர்ாணுவப் படைத் தளங்களைத் தாக்கி, 18 அமெரிக்கர்களின் உயிரிழப்புக்குக் காரணமாக அமைந்த "Black Hawk Down" சம்பவத்தின் சூத்திர தாரியாக அறியப்பட்டவர்.

தற்போது, இரான் நாட்டில் மறைந்திருக்கிறார் அல்-அடெல். அங்கிருந்த படியே அல்-கொய்தா அமைப்பை வழி நடத்துவதும், பிறநாடுகளிலிருக்கும் துணை அமைப்பு களை ஒருங்கிணைப்பதும் சாத்தியமில்லை என்கிறார்கள் மற்றொரு தரப்பினர். ஒரு வேளை அவரைத் தலைவராக நிய மித்தால் அவர்அல்-கொய்தா அமைப்பினரை ஏதோ ஒரு வழியில் தொடர்பு கொள்ள முயல்வார். அப்போது அமெ ரிக்க ராணுவம் அவ ர்மறை விடத்தைக் கண்டு பிடித்துக் கொல்ல, தாக்குதல் நடத்தலாம். இதற்காகவே அவர்கள் தயங்குவதாகவும் சொல்லப்படுகிறது.



30 ஆண்டுகளுக்கும்மேலாக, மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றில் கிளை பரப்பி, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளை அச்சுறுத்தி வந்த அல்-கொய்தா, இன்று தடயமின்றிக் கிடக்கிறது. பயங்கரவாதப் பாதையில் பயணிக்கும் இயக்கங்களின் முடிவு இப்படித்தான் இருக்கும் என்பதற்கு அல் கொய்தா சிறந்த உதாரணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டம் தாண்டிய எங்கள் வீரன்




"சரங்காவுக்கு அடுத்து யரர்னு யோசிச்சா வியாஸ்காந்த்தான்" இலங்கையின் மூத்த கிரிக்கெட் வீரர் திசேர பெரராவின் கூற்று இது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயகாந்த் வியாஸ் காந்த், இலங்கையில் வளர்ந்து வரும் இளம் வீரர்களின் பட்டியலில் உச்ச இடத்தில் இருக்கிறார். லெக் ஸ்பின்னராக லங்கா ப்ரீமியர் லீக் தொடரில் விக்கெட் வேட்டை நடத்தி 'ஜாஃப்னா கிங்ஸ்' அணி சாம்பியன் பட்டத்தை வெல்லக் காரணமாக அமைந்த வியாஸ்காந்த், இப்போது இலங்கை யைத் தாண்டி வங்கதேச ப்ரீமியர் லீகிலும் கால்பதித்திருக்கிறார்.

விரைவில் ஐ.பி.எல் தொடரிலும் இவரின் வருகையை எதிர்பார்க்கலாம். சமீபத்தில், இந்திய அணியின் நட்சத்திர வீரரான ரவிச்சந்திரன் அஷ்வின் கூட இவரை வெகுவாகப் புகழ்ந்து பேசியிருந்தார். இலங்கையின் சமூக அரசியல் சூழலில் வடகிழக்குப் பகுதி தமிழ்க் குடும்பத் திலிருந்து ஒரு வீரர் மேலே வந்து இவ்வளவு வெளிச்சம் பெறுவது எளிதான விடயமல்ல. விஜயகாந்த் வியாஸ் காந்த் ஜூனியர் விகடன் இதழுக்கு வழங்கிய செவ்வியை அப்படியே தருகிறோம்.

"யாழ்ப்பாணத்துல கிரிக்கெட் ஆடுறது ரொம் பவே கஷ்டம். நிறைய அவமானங்களையும் சிரமங்களையும் தாண்டிதான் வாய்ப்புகளைப் பெற்றேன்" என்று பேசத் தொடங்குகிறார் வியாஸ்காந்த்.

**"ஜாஃப்னா கிங்ஸ" அணியை சாம்பியனாக்கிய இந்த சீசனில் உங்களுடைய பயணம் எப்படியிருந்தது?"**

"இலங்கையின் முக்கிய ஸ்பின்னரான ஹசரங்கா எங்கள் அணியில் இல்லை. அது எனக்குக் கொஞ்சம் பதற்றத்தையும் கூடுதல் பொறுப்பையும் கொடுத்தது. அணியின் முக்கிய ஸ்பின்னராக முன்னிற்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அந்தப் பணியை முழுமையாகச் செய்திருக்கிறேன் என நினைக் கிறேன். 'யாரைப் போலவும் செயற்பட விரும்பாதே. வியாஸ்காந்தாக மட்டுமே இரு. உன் திறனை முழுமையாக வெளிக்காட்டு" என்ற என் பயிற்சியாளர்களின் அறிவுரை பேருதவியாக இருந்தது. இறுதிப்போட்டிக்கு முன்பாக தமிழ்நாட்டிலிருந்து ஹேமங் பதானி சில ஆலோச னைகளைச் சொன்னார். அவையும் பெரிய அளவில் பயனளித்தன."

**"கிரிக்கெட் மீதான ஆர்வம் எங்கிருந்து வந்தது?"**

"மூன்று வயதிலிருந்தே கிரிக்கெட் பார்க்கத் தொடங்கிவிட்டேன். அப்பா கிரிக்கெட் ரசிகர். அப்பவே நான் மிகப்பெரிய டோனி ரசிகன். டோனியை ரசித்து அவர் மூலமாகவே கிரிக்கெட்டைக் கற்றுக் கொண்டு வளர்ந்தேன். அதேநேரத்தில், அஷ்வினையும் ரொம்பவே பிடிக்கும். நான் அஷ்வின் மாதிரி இருப்பதாக பலரும் கூறுவார்கள். அஷ்வினை பிடித்துப்போனதற்கு அதுவும் ஒரு காரணம். அவர் ஒரு ஆஃப் ஸ்பின்னர். நான் லெக் ஸ்பின்னர். இந்த வேறுபாடு இருந்தாலும் அவரிடம் கற்றுக்கொள்ள நிறையவே இருக்கிறது. உலகின் எந்த மைதானத்திலும் விக்கெட் எடுக்கக்கூடிய அவரின் திறன் எப்போதுமே என்னை வியக்க வைக்கும்."

**"அஷ்வின் தனது யூடியூப் சேனலில் உங்களைப் பற்றியும் பேசியிருந்தாரே?"**

"அஷ்வினை ஒரு முறை நேரில் சந்தித்தாலே போதும் என நினைத்திருந்தேன். அப்படியிருக்க அவரே என்னைப் பற்றி அவதானித்துப் பேசியது பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அஷ்வினை சந்திக்க முடிந்தால் எனது பந்துவீச்சை மேம்படுத் திக்கொள்ள சில டிப்ஸ்களைப் பெறுவேன். டோனி, அஷ்வின் இவர்களைக் கடந்து ஷேன் வார்னே, அஜந்தா மெண்டீஸ், சங்ககரா போன்றோரையும் ரொம்பவே பிடிக்கும். வார்னே ஒரு மேஜிக் மேன். ஷேன் வார்னே வீசும் ஃபிளிப்பர் வகை பந்து களை வீசக் கற்றுக் கொண்டிருக்கிறேன். அதே மாதிரி அஜந்தா மெண்டீஸூம் பயிற்சி முகாம் களில் தனிப்பட்ட முறையில் நிறைய ஆலோ சனைகளைப் பகிர்ந்திருக்கிறார். சங்ககராவின் புகைப்படத்தை என் அறையிலே மாட்டி வைத் திருக்கிறேன். அந்த அளவுக்கு அவர்மீது ஈர்ப்பு உண்டு."

**"ஐ.பி.எல் போட்டிகளில் விளையாட ஆசை இருக்கிறதா?"**

"ஐ.பி.எல் ஆட வேண்டும் என்பது எல்லா வீரர்களுக்குமே ஒரு கனவுதான். 2020-லேயே ஐ.பி.எல் ஏலத்திற்குப் பெயரைப் பதிவு செய்தி ருந்தேன். தமிழ்ப் பையன் என்பதால் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கட்டாயம் வாங்கும் எனப் பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், எந்த அணியும் என்னை வாங்கவில்லை. இப்போதும் டோனியின் சென்னை அணிக்காக ஆட வேண் டும் என்பதே என் விருப்பம். இலங்கை அணியின் மஹீஸ் தீக்சனா சென்னை அணிக்காக ஆடி வருகிறார். டோனியுடனான தீக்சனாவின் அனுப வமும் உரையாடலும் எப்படியிருக்கும் என ஒவ்வொரு முறையும் கேட்டுக்கொண்டே இருப் பேன். நமக்கு இப்படி ஒரு வாய்ப்பு கிடைக்க வில்லையே என ஏக்கமாக இருக்கும். விரைவில் அந்தக் கனவு நிஜமாகும் என்ற நம்பிக்கை இருக்கிறது."

**"இலங்கையில் கிரிக்கெட் சூழல் எப்படியி ருக்கிறது. சிங்கள - தமிழர் வேறுபாடு கிரிக்கெட்டிலும் வெளிப்படுகிறதா?"**

"என்னுடன் வேறு இரண்டு தமிழ் வீரர்க் ளுமே லங்கா ப்ரீமியர் லீகில் ஆடினார்கள். எங்களைத் தாண்டியும் இங்கே நிறைய திறமை யாளர்கள் இருக்கிறார்கள். உண்மை என்ன வெனில், யாழ்ப்பாணத்திலோ அல்லது தமிழர்கள் வாழும் வேறு பகுதியிலோ கிரிக்கெட் ஆடி முன்னேறுவது என்பது கடினமே. கொழும்பில் கிரிக்கெட் ஆடி பயிற்சி பெறும் ஒருவரையும் தமிழ் நிலத்தில் பயிற்சி பெறும் ஒருவரையும் ஒப்பிடவே முடியாது. முதலாவது, மொழி வேறுபாடு. கிரிக்கெட் ஆடத் தொடங்கிய காலத்தில் சிங்களர் - தமிழர் பிரச்சினை காரணமாக பெரும் பயமும் தயக்கமும் எனக்கு இருந்தது. இதுவே ஒரு பெரிய தடைதான். அடுத்ததாக கொழும்பில் இருக்கும் சௌகர்யம் ஏதுவும் இங்கிருப்பவர்களுக்குக் கிடைக்காது. பயிற்சியாளர்கள் பெரிதாக இல்லை. நல்ல உடற்பயிற்சிக் கூடங்கள் எதுவும் இல்லை. இங்கு பயிற்சி செய்ய ஒரு நன்கு பக்குவப்படுத்தப்பட்ட பிட்ச்சே கிடையாது. இப்படி ஒரு சூழலில் வளர்ந்து வரும் வீரர், கொழும்பில் அத்தனை சௌகரி யத்தையும் அனுபவித்து வரும் வீரரோடு போட்டி போட்டு முன்னேறுவது கடினம்தான். நிறையவே பொறுமை தேவை. நாம் சில கஷ்டங்களைக் கடந்துதான் வெல்ல வேண்டும். ஒரு கட்டத்திற்கு மேல் தாண்டி வந்துவிட்டால் எல்லாரும் இலங் கையர் எனும் எண்ணம் மேலோங்கியிருப்பதை மறுக்க முடியாது. வனிந்து ஹசரங்காவும் மஹீஸ் தீக்சனாவும் எனக்குப் பல சமயங்களில் எந்த வேறுபாடும் பார்க்காமல் உதவியிருக்கிறார்கள்."

**"இலங்கை கிரிக்கெட்டே இக்கட்டான காலகட்டத்தில் இருக்கிறதே?"**

"உண்மைதான். ஆனால், சமீபமாக நாங்கள் மீண்டெழ ஆரம்பித்திருக்கிறோம். ஆசியக்கோப் பையை வென்றிருக்கிறோம். கபில்தேவிற்குப் பின் பல வீழ்ச்சிகளையும் சரிவுகளையும் சந்தித்து இந்தியா 2011 இல் உலகக்கோப்பையை வென் றதைப் போல இலங்கையும் வெல்லும். வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் இலங்கை அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருப்பேன்."




ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டக் கோட்டை

ஆயிரம் காளைகளை தோற்றிய மண்ணில்
பாரினர் வியந்திடும் பட்டக் கோட்டையாய்

காண்கின்ற கண்கள் கதிராய் ஒளிக்க
வான்வெளி பட்டக் கடலாய் தெரியுது


ஆயிரம் பாதையில் சென்றிடும் உலகில்
மூழ்கிடும் வெறியாய் பட்டம் ஏற்றிட

தாயக மண்ணில் சிறப்பின் ஒன்றாய்
பட்டப் போட்டிகள் கணையாய் தொடுக்க

உலகவர் வியந்திடும் உயர்நுட்ப அறிவில்
தோன்றிடும் பட்டம் யாழில் சிறக்க

பாலகர் தொடர்ந்து பெரியவர் வரைக்கும்
ஏற்றிடும் இன்பக் கலையாய் இருக்க

பட்டக்கோட்டை என் மண் என்று திமிருடன்
உரைப்பேன் என் கவி கொண்டு



ந.விதுஷன்,
யா/ஹாட்லிக் கல்லூரி.

# அழியாத மொழி தமிழே!

முல்லை நிலத்திடை
தோன்றிய முதல்மொழி
மண்ணில் தமிழ் மொழியே
எல்லை இல்லா நிலை
யோடு நிலம் கடல்
கண்டதும் தமிழ் நிலமே

ஈட்டியொடு வேட்டையாடி
புத்தெழுச்சி த்னைக் கொண்டு
உரமான தெங்கள் தமிழே!
வேல் கொண்டு போராடி
புவிதன்னில் உருவான
மத மதனைக் கண்டதுவும் தமிழே

கல்லான மலை கண்டும்
களித்திங்கு உருவாகி
முகிழ்த்த நிலம் குறிஞ்சி ஆகும்
எல்லையில் புவி எங்கும்
நிலம் நான்காகி நிலைபெற்று
அய்ந்தான நிலம் தமிழ் நிலமே!

தொல்லை இல்லாப் புவிதன்னில்
எங்கும் பரந்தின்று புவி பெற்றுத்
துலங்கு மொழி பதினெட்டின்
அன்னை யாகி ஆதிக்கம் செய்யாது
நலம் கண்டு புவி வாழும்
அவை கண்ட மொழி தமிழே!

சொல்லோடு சொல்லொன்றி
சுவை கூறிப் புவி வாழும்
உலகாளும் மொழி தமிழே!
எல்லை இல்லாப் புகழ்
கண்டு புவிமீதுயர்வோடு
அழியாத மொழி தமிழே!

வளவைவளவன்

# என் அம்மா!



ஈர ஐந்து மாதங்கள் என்னை
கருவில் சுமந்து படாத
துயர்பட்டு உங்கள் உயிரை
பணயம் வைத்து எனக்கு
உயிரைத் தந்த என் அன்பான அம்மாவே!

காலங்களும் புரண்டு ஓட
பிரசவித்த தருணங்களும் பறந்தோட
அன்பாக அரவணைத்து உங்கள்
உதிரத்தை பால் ஆக்கி
எனக்கு அமுதமிழ்த்து பாசமுடன்
இந்தப் பாரினிலே என்னை
வளர்த்த என் அன்பான அம்மாவே!

உங்கள் மனதில் இருக்கும்
கவலைகள் சொல்லாதவைகளாய்
மனக் குமுறல்கள் உங்களை விரட்ட,
எம்மைப் பார்த்தவுடன்
மனதில் இருக்கும் கவலைகளைக்
காட்டாது எம்மைப் பாசமுடன் அரவணைத்து
அன்பாய்க் கட்டியணைக்கும்
என் அன்பான அம்மாவே!

உங்கள் பாசத்திற்கு - ஒரு
குறையும் கூற முடியாது
என் அன்பான அம்மாவே

இந்த உலகத்தில்
ஈடு இணையற்றது அம்மா
உங்கள் பாசம்!

சு.பிரகாசனா,
திருநெல்வேலி.

## மௌனத்தின் தேடல்- 593



# பொங்கியது பூரிப்பு

தைமகள் தமிழிச்சி
அடுப்பிலே பொங்கியது
பால் பொங்கல்;
அவள் முகத்திலே
பொங்கியது பூரிப்பு.

பி.மதுஷ்சன்
தையிட்டி.

# கடும் போட்டி

அரிசி அளந்த உழவன்
பால் தந்த பண்ணைக்காரன்
கரும்பு நட்ட தோட்டக்காரன்
பானை வனைந்த கைவினைஞன்
இவர்களைக் கைவிட்டு
பேனை பிடித்தவனுக்கே
கல்யாண சந்தையில்
கடும்போட்டி

பி.யதுர்சன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# ஏழை வீட்டில்...

போன பொங்கல்
பெருந்தொற்றாம்
கொரோனா குறுக்கீடு
ஆனவற்றைக் கொண்டு
ஆக்கிப் பொங்கல்
ஆதவனுக்கு நன்றி
செய்தோம் இந்த முறை
இமயமாய் எகிறிய விலை
எல்லாப் பண்டமுமே எனில்
ஏழை வீட்டில் ஏது பொங்கல்

வைகதன்,
கொக்குவில்.

## மௌனத்தின் தேடல்- 594



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

ஏறும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# பொங்குவது

இயற்கைக்கு நன்றியாய்
மனங்களின் மங்களம் பொங்க
இனிய பொங்கல் பொங்கி
கூடிக் குதூகலித்தது ஒரு காலம்
இன்றைய பொங்கல் நாளிதோ
மனங்களும் வேகுகின்றன
விலைவாசி உயர்வினாலும்
விளைச்சல் இல்லாமலும்
வருமானக் குறைவினாலும்

சி.இ.அன்புதுரை,
சம்மட்டிஓலை,
மானிப்பாய்.

# வாழ்வும் வளமும்

விலைவாசிகள் தொடர்ந்தும்
சிகரத்தைத் தொட்டாலும்
பாரம்பரிய தைப்பொங்கல்
வாழ்வாதாரத்தை ஓங்க வைக்கும்
தட்டுப்பாடான பொருட்கள் போல்
கட்டுப்பாடு இல்லாமல் ஒற்றுமை
பட்டபாட்டை தூர விலக்கிடும்
திடமான திட்டம் தோன்றட்டும்

க.நாகராசா, புணாவில்.

# தேசிய பொங்கல் விழா

காகிதத் தட்டுப்பாடு
கல்விக்கு இனி ஏடு இல்லை
காலத்தை ஓட்டுதற்கு
கரன்சியும் அரசிடம் இல்லை
தேர்தலுக்கான செலவும்
தேடிட வழியும் இல்லை

ஆயுளுக்கும் இனி படியுமில்லை
கரண்டு கட்டுண்டு தினமும்
காலமும் இருட்டில் முழ்கினும்
மின்சாரக் கட்டணமோ மிக
மிதமிஞ்சி வாட்டுங் காலை
தேசிய பொங்கல் விழா போதும்
இன்னும் ஏன் பொங்கல் எமக்கு

கார்வண்ணன், காவலூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலத்தின் பதிவு 48

# கடல் புறா

## எதிர்பாராத விபரீதம்

பிரதி விநாடி நாற்புறமும் நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த இளையபல்லவனின் கண்கள் ஒரே ஒரு விநாடி மட்டும் மஞ்சளழகியின் கண்களோடு உறவாடின. தன்னைப் போரிட வேண்டாமென்று மன்றாடிய அந்தக் கண்களின் கெஞ்சிய தோற்றத்திலிருந்த அழகை, ஆபத்தான அந்தச் சமயத்திலும் அவன் ரசித்தான்.

அவள் தன் நிலையைப் பற்றிக் கவலைப் பட்டது பெரும் ஆறுதலையும் மகிழ்ச்சியையும் பெருமையையும் கூட அளித்தது அவனுக்கு. அவன் அவளை நோக்கித் தைரியமூட்டும் புன்சிரிப்பொன்றை மட்டும் வீசிவிட்டு மீண்டும் அமீரை நோக்கினான். கனவில் நடப்பவன் போல் அவனிருப்பிடத்தை அடைந்த அமீர் அவன் இஷ்டப்படி ஆணையிட்டான்.

இளையபல்லவன் குரல் மீண்டும் எழுந்தது பலமாக. "நான் மட்டும் ஆணையிடச் சொல்லிப் பலன் இல்லை. இந்த இடத்தில் குழப்பத்தையும் மேற்கொண்டு கொலையையும் தடுக்க வேண்டுமானால் இதோ இருக்கும் அந்த மூவராலும் அவர்களைச் சார்ந்த ஐம்பது வீரர்களாலும் இங்கு யாருக்கும் எவ்வித் தீங்கும் நேரிடாதென்பதற்கு வில்வலனும் உறுதி கூற வேண்டும்?" என்றான் இளையபல்லவன்.

போருக்குச் சித்தமாயிருந்த வில்வலன் கண் சாடை காட்ட, மற்றத் தலைவர் மூவரும் தங்கள் வாள்களை முத்தமிட்டு ஆணையிடவே பல வர்மனை அகலும்படி உத்தரவிட்டான் இளையபல்லவன். பலவர்மனுக்கு என்ன செய்வதென்று தெரியாததாலும், இளையபல்லவன் உறுதிக்கு மேல் நிலைமையும் அவன் கையைவிட்டு மீறிய படியாலும் அவன் அவ்விருவருக்குமிடையில் இருந்து விலகியதன்றி வேல் தாங்கிய காவலரையும் விலகச் செய்தான்.

அடுத்தபடி இருவரும் போர் செய்ய வசதியாயிருக்கும்படி அமீரையும் கண்டியத் தேவனையும் விட்டுக் கூட்டத்தை விலக்கிச் சக்கரவட்டமாக இடம் செய்து கொண்ட இளையபல்லவன், தன் கையிலிருந்த வாளை, அப்படியும் இப்படியும் இருமுறை திருப்பிப் பதம் பார்த்து விட்டு எதிரேயிருந்த வில்வலனை நோக்கி, "இனி உங்கள் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்" என்றான்.

அடுத்த விநாடி உருவிய தன் பெருவாளை ஓங்கிக் கொண்டு அதிவேகமாக இளையபல்லவன் மீது பாய்ந்து விட்டான் வில்லவன்.

அந்த இருவரின் வாள்போர் பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தது. பயங்கரத்திலும் ஒரு இன்பமிருக்க முடியும் என்பதைக் கொள்ளைக்காரர் மட்டுமின்றி அங்கிருந்த அநாகரிகப் பூர்வகுடிகளும் உணர்ந்து கொண்டார்கள். அந்தப் பூர்வகுடிகளின் தலைவர்களுக்கு இளையபல்லவன் போர்முறை புதிதாகவும் படிப்பினையைத் தருவதாகவும் இருந்தது.

வில்வலனுடைய பயங்கரமான ஆகிருதிக்கு முன்பு அங்கியைக் கழற்றியதும் சிவந்து அழகாகத் தெரிந்த மேனியுடனும் வீரக்களை சொட்டும் அழகிய முகத்துடனும் காட்சியளித்த அந்த வாலிபனின் மெல்லிய கரங்கள் எதைத்தான் சாதிக்க முடியும் என்று நினைத்தார்கள். பூர்வ குடித் தலைவர்கள் மூவரும் எத்தனையோ பயங்கரப் பிரகிருதிகளை இரண்டு மூன்று நிமிடங்களில் வீழ்த்தியிருக்கும் வில்வலனின் பெரும் பட்டாக் கத்திக்கு முன்பு இளையபல்லவன் நீட்டித்து நின்ற நீள வாள் அரை விநாடி நிற்க முடியாது என்று தீர்மானித்து, இளையபல்லவனின் முடிவைச் சண்டை துவங்கிய சில விநாடிகளுக்குள்ளாகவே எதிர்பார்த்தார்கள்.

முடிவு அப்படித்தான் இருக்குமென்று பலவர் மன்கூடப் பயந்தான். ஆனால் போர் தொடரத் தொடர வியப்பு பலவர்மனை மட்டுமின்றி, கூட்டத்தையும் ஆட்கொண்டது.

(தொடரும்...)

---

### கொமோடோ தீவுகள்

கொமோடோ இந்தோனேசியாவில் உள்ள 17 000 சுந்தா தீவுத் தொகுப்பினுள் அமைந்திருக்கும் சிறிய தீவுகளில் ஒன்றாகும். இது சும்பவா தீவிற்கு கிழக்கில், புளோரெஸ் தீவிற்கு மேற்கில் அமைந்துள்ளது.

இந்தோனோசியாவின் கிழக்கு நுசா டெங்கரா மாகாணத்தில் உள்ளது. பூங்காவை சேர்ந்த இத்தீவு ராட்சசப் பல்லியினமான கொமோடோ டிராகனின் முதன்மையான வாழிடமாகும்.

பல ஆபத்தான பாம்பு இனங்கள், விஷப் பூச்சிகள் நிறைந்த தீவு கொமோடோ.

இந்தோனேசிய ஜனாதிபதி சுகார்த்தொ 1990 ஆம் ஆண்டு அப்போதைய



# உலகின் இயற்கை அதிசயங்கள் ஏழு - பகுதி2

390 சதுர கிமீ பரப்பளவு கொண்ட இத்தீவில் ஏறத்தாழ 2000 மக்கள் மட்டுமே வாழ்கின்றனர். இங்குள்ள ஆதிகுடி மக்களுக்கு ஒரா என்று பெயர்.

தொடக்க காலத்தில் இஸ்லாமியர் மட்டுமே வாழ்ந்து வந்த இந்தத் தீவில் தற்சமயம் கிருத்துவ மற்றும் இந்து மதத்தினர் சிலரும் வாழ்கின்றனர்.

இந்தோனேசியாவின் கொமோடோ தேசியப்

அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ்க்கு நாகா எனப் பெயரிடப்பட்ட கொமொடோ ட்ராகனை பரிசாக அளித்தார்.

அதனை ஜார்ஜ் புஷ் சின் சினாட்டி உயிரியல் பூங்காவுக்கு அளித்துவிட்டார். அதற்குப் பிறகு அந்த உயிரியல் பூங்காவின் பார்வையாளர் எண்ணிக்கை லட்சணக்கணக்கில் கூடிவிட்டதாம்.

கொமோடோ டிராகன்களில் ஆண் இனம் சுமார் 95 கிலோவும் பெண் டிராகன்கள் 70 கிலோக்களும் இருக்கும்.

தங்கள் உடல் எடையில் 70 சதவிகிதம் அளவிலான இரையை சாப்பிடும் திறன் கொண்டவை. ஒன்றுக்கு ஒன்று சண்டையிட ஆரம்பித்தால் கோரமாக சண்டையிட்டு கொல்லும் வரை விடாது. இந்த அபூர்வ டிராகன் வாழும் பொருத்தமான தட்ப வெப்பம் இங்குதான் நிலவுகிறது.

இங்கு ரோஜா நிற மணல் கொண்ட (வெள்ளை மற்றும் சிவப்பு நிற மணல் கலந்ததால் கிடைத்த நிறம்) கடற்கரை உள்ளது. இக் கடற்கரையையும் சேர்த்து உலகில் ஏழு இடங்களில் மட்டுமே இந்நிறத்தில் மணல்கொண்ட கடற்கரைகள் உள்ளன.

ஆங்கிலத்தில் 'ஜுராசிக் பார்க்' படம் அனைவரும் பார்த்திருப்போம். நிஜமான உயிரோட்டமான ஜுராசிக் பார்க் கொமோடோ தீவுகள் தான் என அங்கு சென்று வந்த சுற்றுலப் பயணிகள் வியப்போடு குறிப்பிடுவார்களாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

‘நித்திலம் தொகுத்து வழங்கும்’

# சுகமான விடியல்

324

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# உடற்பயிற்சி மூலம் நாம் வாழும் காலத்தை அதிகரிக்க முடியும்

ஒவ்வொரு மனிதனும் கருவறையிலே தன் உடற்பயிற்சியை ஆரம்பிக்கிறான். பிறந்த பின்னரும் கூட துடியாட்டத்துடன் தனது பயிற்சியை தொடருகிறான். ஆனால் வளர்ந்து வரும் பொழுது பல்வேறு சூழ்நிலைகளால் உடற்பயிற்சி செய்வது குறைவடைந்து பல நோய் நிலைகளுக்கு ஆளாகிறான்.

உடற்பயிற்சி என்பது எமது அனைத்து ஆரோக்கியங்களுக்குமான திறவுகோல் என்று தெரிந்திருந்தும் இதனை நாம் தொடர முடியாமல் இருப்பதற்கு காரணம் என்ன? இவற்றை தொடருவதற்கான தடைகளை கண்டறிந்து அவற்றை தகர்த்தெறிய வேண்டிய தேவை எழுந்திருக்கிறது.

உடற்பயிற்சி மூலம் எமது ஆயுளை அதிகரிக்க முடியும். அதாவது நாம் வாழும் காலத்தை அதிகரிக்க முடியும் என்பது தெளிவாக அறியப்பட்டிருக்கிறது. அத்துடன் எமது வாழ்க்கைத்தராதரமும் மேம்படும். அதாவது மனதின் மகிழ்ச்சிநிலை, உடல் ஊக்கம், மன ஊக்கம் என்பன மேம்பட்டு ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு ஒழுங்கான உடற்பயிற்சி வழிசமைக்கும் என்று ஆய்வுகள் தெளிவுபடுத்தி இருக்கின்றன.

இதற்கு மேலதிகமாக ஒழுங்கான உடற்பயிற்சியானது பல நோய்களிலிருந்து எம்மைக் காக்கும் காவலரணாக திகழ்கிறது. உதாரணமாக உயர்குருதி அமுக்கம், நீரிழிவு, கொலஸரோல், மாரடைப்பு, பாரிசவாதம், எலும்பு சம்பந்தமான நோய்கள் போன்றவற்றிலிருந்து எம்மை பாதுகாக்கின்றது.

அத்துடன் உடல்நிறையை குறைத்து உடல் அழகையும் ஆளுமையையும் மெருகேற்ற உடற்பயிற்சி உறுதுணையா அமைகின்றது.

உடல் நலத்தை மாத்திரமல்ல மனநலத்தை மேம்படுத்துவதற்கும் உடற்பயிற்சி உறுதுணையாக அமைகின்றது என பல ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

மனச்சோர்வைக் குறைத்து சிந்தனை ஆற்றலையும் கற்கும்



திறனையும் மேம்படுத்தி ஞாபக மறதி தன்மையை குறைப்பதற்கும் உடற்பயிற்சி உதவும் என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

ஒழுங்கமைக்கப்பட்ட உடற்பயிற்சிகளை செய்து வருவோமாயின் எமது மருத்துவச் செலவுகள் பெருமளவில் குறைவடையும். ஏற்கனவே நோய் நிலை உள்ளவர்கள் பொருத்தமான உடற்பயிற்சிகளை செய்து வந்தால் அவர்களின் நோயின் தீவிரம் பெருமளவு குறைவடைவதுடன் அவர்கள் பாவித்துக் கொண்டிருக்கும் மருந்தின் அளவையும் குறைத்துக் கொள்ள முடியும்.

நாம் உடற்பயிற்சியில் ஆர்வம் செலுத்துவது எமக்கு மாத்திரமல்ல எமது அடுத்த சந்ததியினருக்கும் பயனுடையதாக அமையும். தாய் தந்தையரை பார்த்துத் தான் அவர்களது பிள்ளைகள் பழகிக் கொள்கிறார்கள். தாய் , தந்தையர் ஒழுங்காக உடற்பயிற்சி செய்து வருவார்களாக இருந்தால் அவர்களின் வளர்ந்து வரும் பிள்ளைகளின் மனதிலே உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்ற உணர்வு ஆழமாக பதியும். அவர்கள் பெரியவர்களான பின்பும் அந்தப்பழக்கத்தை தொடர்ந்து கொள்வார்கள்.

சிறுவயதிலிருந்தே உடற்பயிற்சி செய்துவருவார்களாக இருந்தால் இருதயம், நுரையீரல், மூட்டுகள், மூளை, ஈரல் என்பன ஆரோக்கியமாக விருத்தியடையும். அத்துடன் இதன் மூலம் அவர்கள் பல நண்பர்களை சம்பாதித்துக் கொள்வார்கள். அவர்களின் தொடர்பாடல் திறன் மேம்படும். இவ்வாறாக எண்ணற்ற பயன்கள் உடற்பயிற்சியினால் ஏற்படுகின்றன என்று தெரிந்தும் நாம் அவற்ஂற செய்யாமல் இருப்பதன் காரணம் என்ன? உடற்பயிற்சி செய்ய நேரமில்லை என்று சொல்லிக் கொள்கிறோம்.

எமது நேரத்தை சரியான முறையில் திட்டமிடும் திறனை வளர்த்துக் கொள்வோமாக இருந்தால் எமக்கு அனைத்து நடவடிக்கைகளுக்கும் நேரம் மிஞ்சும். அப்படிச்செய்தும் நேரம் போதாமல் இருந்தால் முக்கியமில்லாத வேலைகளை கைவிடலாம். ஆனால் உயிர் காக்கும் உடற்பயிற்சியை கைவிடுவது உகந்ததாகாது.

“காலை தொடக்கம் மாலை வரை தொடர்ந்து வீட்டு வேலை, கந்தோர் வேலை. இந்தப் பயிற்சி காணும்” என்று சொல்லி திருப்திப்பட்டுக் கொள்கிறோம். எமது வழமையான வேலைகளுக்கு மேலதிகமாக உடற்பயிற்சிக்கும் நேரத்தை ஒதுக்கிக் கொள்வது அவசியம்.

பஞ்சி, களைப்பு, இளைப்பு என்று சொல்லி சோம்பேறித்தனமாக சும்மா இருந்து விடுகிறோம். ஒழுங்காக பயிற்சி செய்து வருவோமாக இருந்தால் பஞ்சி,களைப்புத் தன்மைகள் அனைத்தும் பறந்தோடி விடுவதை நீங்கள் அனுபவ ரீதியாக உணரமுடியும்.

எமக்கு பொருத்தமான உடற்பயிற்சி எது என்பதை தெரிவு செய்வதில் காணப்படும் குழப்ப நிலையும் உடற்பயிற்சி செய்வதை நாம் பிற்போட காரணமாக அமைகிறது.

எமக்கு பிடித்த பொருத்தமான பயிற்சியை தெரிவு செய்து அதனைத் தொடருவோம். உங்கள் உடற்பயிற்சிக்கு நீங்கள் பயனுடைய விடயங்களை செய்ய ஆரம்பித்தால் உதாரணமாக வீட்டுத்தோட்டம் செய்தல், ஆடு, மாடு வளர்த்தல், போக்குவரத்துக்கு, துவிச்சக்கர வண்டிகளை பாவித்தல், பயன் தரும் மரங்களை நாட்டி நீரூற்றி வளர்த்தல் போன்றவற்றை செய்து வந்தால் மனதுக்கு புத்தாக்கமும் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் ஏற்படுவ்துடன் சூழல் பாதுகாப்பிற்கும் உறுதுணையாக அமையும்.

நாம் மாத்திரம் உடற்பயிற்சி செய்வதுடன் நின்று விடாது எம்மைச் சார்ந்தவர்களையும் செய்யுமாறு ஊக்கப்படுத்த வேண்டும்.

உடற்பயிற்சியை எமது வாழ்வின் ஒரு அங்கமாக மாற்றுவோம். அதனை இன்றே ஆரம்பிப்போம். ஆரோக்கியத்தின் திறவுகோல் எங்கள் கைகளிலேயே இருக்கிறது.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக எடை காரணமாக ஆற்றில் மூழ்கியது படகு

## 145 பேர் பலி



(கொங்கோ)

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் 200 பயணிகளுடன் சென்ற மோட்டார் படகு லூலோங்கா ஆற்றில் மூழ்கியுள்ளது.

இந்த விபத்தில் 145 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன் 55 பேர் உயிர் தப்பியுள்ளனர்.

லூலோங்கா ஆற்றில் மோட்டார் படகு அதிக சுமையுடன் பயணித்ததால் விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பயணிகள் தங்கள் பொருட்கள் மற்றும் கால்நடைகளுடன் மோட்டார் படகில் கொங்கோ குடியரசுக்குச் சென்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டது.

படகில் பயணிகள், பொருட்கள் மற்றும் கால்நடைகள் அதிகளவில் ஏற்றப்பட்டதால், படகு அதிக எடை காரணமாக ஆற்றில் மூழ்கியது.

கொங்கோவில் சாலைகள் இல்லாததால் மக்கள் படகுகளில் பயணம் செய்கின்றனர் இதனால் அடிக்கடி படகு விபத்துக்கள் நடக்கின்றன என தெரிவிக்கப்படுள்ளது. (4)

# உலகின் மிக வயதான நாய் கின்னஸ்ஸில் இடம் பிடித்தது



(வொஷிங்டன்)

உலகில் உள்ள நாய்கள் 10 முதல் 15 ஆண்டுகள் வரை அதிகபட்சம் உயிர் வாழும். ஒரு சில நாய் இனங்கள் 15 முதல் 20 ஆண்டுகள் வரை தாக்குப்பிடிக்கும்.

இந்நிலையில் 23 ஆண்டுகள் வாழ்ந்து வரும் அமெரிக்க நாய் ஒன்று கின்னஸ் சாதனை படைத்துள்ளது.

ஸ்பைக் என்று பெயரிடப்பட்டுள்ள சிவாவா இன கலவை நாய் ஒன்று 23 ஆண்டுகள் 7 நாட்கள் வாழ்ந்து உலக சாதனை பிடித்துள்ளது.

லொஸ் ஏஞ்சல்ஸில் 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம், ஜினோ என்ற 22 வயதான சிவாவா கலப்பு நாய் உலகின் மிக வயதான நாய் என்று பெயரிடப்பட்டது.

அதன் பின்னர் ஓஹியோ மாகாணத்தில் உள்ள ஸ்பைக் அந்த சாதனையை முறியடித்துள்ளது.

2022 ஆவது ஆண்டில் வயதான நாய் என்று உலக சாதனை பட்டியலில் இடம் பிடித்துள்ள நான்காவது நாயாக ஸ்பைக் உள்ளது.

நவம்பர் 1999 இல் பிறந்த ஸ்பைக் 2010 ஆம் ஆண்டு தற்போதைய உரிமையாளரின் கைகளுக்கு வந்துள்ளதாக கூறப்படுகிறது. (4)

# பயிர்களை நாசம் செய்வதால் குரங்குகளை அழிக்க்வுள்ள நாடு

(சின்ட் மார்டன்)

"வெர்வெட்" குரங்குகள் தெற்கு மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவை பூர்வீகமாகக் கொண்டவை ஆகும். இந்த வகை குரங்குகள் 17 ஆம் நூற்றாண்டில் கரீபியன் தீவுப் பகுதிகளை வந்தடைந்தன. இந்நிலையில், கரீபியன் நாடான சின்ட் மார்டனில் ஒட்டுமொத்த வெர்வெட் குரங்குகளையும் அழிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




இந்த வகை குரங்குகள் தங்கள் விவசாய நிலங்களில் பயிர்களைத் தாக்கி வாழ்வாதாரத்தையே அழித்து வருவதாக விவசாயிகள் தொடர்ந்து புகாரளித்து வந்தனர். இதனால் வெர்வெட் குரங்குகள் அப்பகுதி மக்களால் தொல்லையாக கருதப்பட்டு வந்துள்ளது.

இதையடுத்து குரங்குகளைக் கொலை செய்ய அந் நாட்டு அரசு முடிவெடுத்துள்ளது. இருப்பினும் குரங்குகளைக் கொல்வதற்கு பதிலாக அவற்றிற்கு கருத்தடை செய்வது சிறந்த வழியென்று விலங்கு நல ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசு நிதியுதவியில் தொண்டு நிறுவனம் மூலம் அடுத்த 3 வருடங்களில்சுமார் 450 க்கும் அதிகமான குரங்குகளைப் பிடித்து கொலை செய்யவுள்ளது குறிப்பிடத்தக்கது. (4)

# ஆப்கானில் கடும் குளிர் இதுவரை 78 பேர் பலி



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஒரு வாரத்துக்கு மேல் நிலவி வரும் மிகக் கடுமையான குளிருக்கு இதுவரை 78 பேர் பலியானதாக தலிபான்களின் செய்தித் தொடர்பாளர் ஷஃபிஹுல்லா ரஹீமி தெரிவித்தார்.

குளிர் தாங்காமல் 75 ஆயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகளும் இறந்து விட்டதாக அவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வாரங்களாக ஆப்கானிஸ்தானில் உள்ள பல மாகாணங்களில் கடும் குளிர் கால நிலை நிலவி வருகின்றன. மத்திய கோரின் பகுதி வார இறுதியில் -33C(-27F)ஆக மிகக் குறைந்த அளவான வெப்பநிலை பதிவாகியுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான படைகள் வெளியேறியதை அடுத்து தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றிய பின் ஆப்கானிஸ்தானின் இரண்டாவது குளிர்காலம் இதுவாகும். (4)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1979 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா:30 ½ சூரி 4 செவ் 3 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: A/L Welding Shop<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13291 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 52 ½ சூரி 1 செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்: பட்டதாரி<br>எதிர்பார்ப்பு:அரச,தனியார் சொந்தத்தொழில்<br>தொ.இ: G/11776 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: சூரி , செவ் 10 இல்<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்:Mechanical Engineer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: B/13292 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 23 ½ சூரி 8 செவ் 1 இல்<br>உயரம்:155 cm<br>தகைமை/ தொழில்: HNDM<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>விவாகரத்தானவர்<br>தொ.இ: G/11866 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: சூரி , செவ் 9 இல்<br>உயரம்: 171 cm<br>தகைமை/தொழில்: Dental Surgeon (BDS)<br>எதிர்பார்ப்பு: மருத்துவம் சார்ந்த தொழில்<br>தொ.இ: B/13293 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 27 ½ சூரி . செவ் 10 இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/ தொழில்: Cima<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/11867 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை 1<br>கி.பா: 43 ½ சூரி 6 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: O/L வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13295 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 47 சூரி 1 செவ் 9 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HND IT<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/11871 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில்
# படைப்புழுவின் தாக்கத்தால்
# சோளச் செய்கை பாதிப்பு

**(தருமபுரம்)**

**கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் தற்பொழுது சோளப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் படைப்புழுவின் தாக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.**



கிளிநொச்சி மாவட்டத்தின் புளியம்பொக்கனை கமல சேவை பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் சில விவசாயிகள் சோளப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சோளப்பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதம் கடந்த நிலையில் படைப்புழுவின் தாக்கம் மிகவும் சடுதியாக அதிகரித்து காணப்படுவதாகவும் இதற்கான தீர்வினை பெறும் வகையில் புளியம்பொக்கணை கமல சேவை விவசாய போதன ஆசிரியரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக கிருமிநாசினி விசிறப்பட்டிருந்த போதிலும் முற்று முழுதாக கட்டுப்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவித்தள்ளனர்.

நாட்டில் சோளப் பயிற்செய்கைக்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்த போதிலும் படைப்புழுவுக்கான உரிய கிருமிநாசினி பெற முடியாத நிலையில் தமக்கு இது தொடர்பாக போதிய விளக்கம் இல்லாத காரணமாகவும் இம்முறை சோளப் பயிர்ச்செய்கை பெரும்பாதிப்பிற்குள்ளாகியுள்ளது.

இனிவரும் காலங்களில் சோளப் பயிற்செய்கையை செய்ய முடியாத நிலை ஏற்படும். எனவே இது தொடர்பாக விவசாய திணைக்கள அதிகாரிகள் எமக்கான சோளப்பயிற் செய்கைக்கான முழுமையான விளக்கத்தையும் நோய் தாக் கத்திற்கான அறிவுறுத்தல் தொடர்பாக எமக்கு தெளிவுபடுத்தப்பட்டால் தொடர்ந்தும் சோளப் பயிற்செய்கையை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளனர். (4-316)

# 11 அரசியல் கட்சிகளும் 2 சுயேச்சை குழுக்களும்
## கிளிநொச்சியில் வேட்பு மனுத்தாக்கல்

(கிளிநொச்சி)

கிளிநொர்ச்சியில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் 2023 இல் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களை 11 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும்,2 சுயேச்சைக்குழுக்களும் தாக்கல் செய்துள்ளன.

கரைச்சி பிரதேச சபைக்கு 11 அரசியல் கட்சியும் ஒரு சுயேச் சைக்குழுவும், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு பத்து கட்சிகளும், ஒரு சுயேச்சைக் குழுவும், பூநகரி பிரதேச சபைக்கு ஒன்பது அரசியல் கட்சிகள் வேட்புமனு தாக்கல் செய்துள்ளன.

அந்த வகையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை தமிழரசு கட்சி, சமத்துவக் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி, சிறிலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ,ஈழமக்கள் ஜனநாயக கட்சி, ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஆகிய பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்கள் இரண்டும் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளன. (4-100-316)

## வெளிநாடு செல்ல முற்பட்ட
# வடக்கு இளைஞர்கள் நால்வர் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

போலி போலந்து வீசாக்களுடன் நான்கு பேர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் டோஹா, கட்டார் ஊடாக போலந்து செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் இராஜ கிரிய பிரதேசங்களை வசிப்பவர்கள் எனவும், அவர்கள் 21 மற்றும் 37 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டரீதியாக போலந்துக்கு தொழில்வாய்ப்புக்காக அனுப்புவதாக உறுதியளித்து அவர்களிடம் இருந்து பணம் பெற்றுக் கொண்ட மனித கடத்தல்காரர்களே இந்த குழுவை அனுப்பியுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மோசடி நபர்களை கைது செய்ய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. (4)

### நூலகமும் அருங்காட்சியகமும் அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஞானோத நூலகமும் அருங்காட்சியகமும் அடிக்கல் நாட்டு விழா நாளை பிற்பகல் 12.36 மணிக்கு கட்டுவன் தென்மயிலை வர்த்தலைவிளான் ஞானோதய வித்தியாசாலை மருங்கில் உள்ள நூலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது என ஞானோத பொது நூலக நற்பணியகம் அறிவித்துள்ளது. (4)

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 பேர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சரசாலை தெற்கு காட்டுப் பகுதியில் நேற்று சனிக்கிழமை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 வாகனங்களை விசேட அதிரடிப்படையினர் மடக்கிப் பிடித்ததுடன் சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து பேரையும் கைது செய்துள்ளனர்.



இதன்போது மணல் அகழ்வில் ஈடுபட்ட 4 டிப்பர்கள் மற்றும் ஒரு மணல் அகழும் இயந்திரம் ஆகியன கைப்பற்றப்பட்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

கைதான நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

### மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு வசந்தபுரம் களபாவோடை அருள்மிகு வசந்த நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 8.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (4)



புங்குடுதீவு சித்தி விநாயகர் மகா வித்தியாலயத்தின் 109 ஆவது ஆண்டு நிறுவுநர் நினைவு தின விழா கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

இவ் விழாவிற்கு நிறுவினர் வேலாயுதவிசுவலிங்கத்தின் பேரனாகிய யாழ். போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நிறுவுநருக்கு மாலை அணிவித்ததுடன் பரீட்சைகளில் சித்தியெய்திய மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி வைத்தார். (படம்:-மகாலிங்கம்)

### சிலை திறப்பு விழாவும் நூல்வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

அண்ணாவியரும் பிரபல இசை நாடக நடிகரும் சோதிடருமான எஸ்.தம்பி ஐயாவின் உருவச்சிலை திறப்பு விழாவும் "அண்ணாவியார் எஸ்.தம்பிஐயாவின் கலைப்புலம்" எனும் நூல் வெளியீடும் இன்று காலை 8.30 மணிக்கு அல்வாய் கலையகம் மண்டபத்தில் பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

# கட்டுப்பாட்டை இழந்தது பேருந்து இருபது பேர் படுகாயம்

(கொழும்பு)

பன்வில பிரதேசத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று மடுல்கல ஊடாக பன்வில நோக்கிச் சென்றபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிச் சென்று விபத்துக்குள்ளானதில் 20 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் பிற்பகல் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த பேருந்தில் 28 பேர் பயணித்துள்ளனர். இவர்களில் 16 பெண்களும் நான்கு ஆண் களும் காயமடைந்து மடுகல்ல பிரதேச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நுவரெலியா பகுதியில் நேற்று முன்தினம் இரவு பேருந்து-வான் விபத்தில் 7 பேர் பலியானதுடன் பலர்காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரமும் ஏமாற்றமும் அறநெறி நிற்கப் போதுமான அறிவில்லாத மூடர் செயலாகும்.

– ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நீர் நிறைந்த அண்டாவில் ஓடித்திரியும் ஆமைகளைப் போல...

ஆலயங்களில் சிவாச்சாரியர்கள் ஆமை உருவில் அமையப்பெற்ற ஆசனத்தில் அமர்ந்திருந்து யாகம் வளர்ப்பதை நாம் அவதானிக்க முடியும்.

ஆமை உருவில் அமையப்பெற்ற மர ஆசனத்தில் அமர்ந்திருந்து யாகம் வளர்க்க வேண்டியதன் அவசியம் யாது? எனக் கேட்டால்,

எங்ஙனம் ஆமை தன் புலன்களை உள்ளிழுத்து அடக்கி நிற்கிறதோ! அதேபோல கிரியா வழிபாட்டைச் செய்கின்ற சிவாச்சாரியர்கள் ஐம்புலன்களையும் அடக்கி கிரியை செய்ய வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்தவே அவ்வாறான ஏற்பாடு என்பது புரிதற்குரியது என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறினோம்.

தனக்கு ஆபத்து ஏற்படும்போது, தன் புலன்களை உள்ளிழுத்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் ஆற்றல் மிக்க ஆமைகள் சில இடங்களில் அறியாமை மிகுதி கொண்டு நடப்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், புலன்களை உள்ளிழுக்கும் ஆமைகளைக் கொல்வதென்பது கடினமான காரியம்.

இதனால், ஆமையைக் கொல்பவர்கள் பெரிய அண்டாவில் குளிர்ந்த நீரை நிரப்பி, அதனை அடுப்பில் ஏற்றி ஆமையை விடுவர்.

குளிர்ந்த நீரில் விடப்பட்ட ஆமைகள் மிகுந்த மகிழ்வோடு அண்டாவுக்குள் ஆடி அசையும்.

இப்போது அண்டா உள்ள அடுப்பில் விறகு வைத்து அனல் ஏற்றப்படும்.

அண்டாவில் உள்ள நீர் மெல்ல மெல்லச் சூடேறும். இறுதியில் கொதிநீரில் அவிந்து ஆமைகள் இறந்து போகும்.

புலன் அடக்கவல்ல ஆற்றல்மிக்க ஆமைகளும் சில இடங்களில் அறியாமை இருளில் மூழ்கி அழிந்து போவதுதான் இங்கு அவதானிக்கப்பட வேண்டிய விடயம்.

இதை நாம் கூறும்போது, என்ன இன்று ஆமைக்கதை என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

ஆம், குளிர்ந்த நீரில் ஓடித் திரிகின்ற ஆமைகள் போல நம் தமிழினமும் இருப்பதைக் காட்டவே மேற்போந்த கதையைக் கூறினோம்.

அன்புக்குரிய தமிழ் மக்களே! எங்களின் ஒற்றுமை உடைந்துவிட்டது. உடன் பிறந்தே கொல்லும் வியாதிபோல எங்களை வைத்தே எங்களைக் கந்தறுக்கும் காரியம் நடந்தாகிறது.

எனினும் அறிவாற்றல்மிக்க எம் தமிழினம் அந்த ஆமை இனம்போல அதனை உணரவில்லை.

உண்மை. நாங்கள் பலயீனப்பட்டுவிட்டோம். எங்கள் இனத்தைப் பலயீனப்படுத்துவதற்காகவே பலர் களமிறங்கி காரியங்களை ஆற்றுகின்றனர்.

நடப்பது என்ன என்ற உண்மையைத் தெரிந்த எம் உத்தமர்கள் ஒதுங்கிக் கொண்டனர்.

அவர்கள் வாய்திறந்து உண்மையைக் கூறினால், வஞ்சகக்கூலிக்கூட்டம் அவர்களை அவமானப்படுத்தி துவம்சம் செய்துவிடும்.

அவர்களுக்காகக் கதைப்பதற்கோ யாரும் இல்லை.

மற்றும்படி தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்க எவரும் இல்லை. இதுதான் சத்தியமான உண்மை.

தமிழ்மக்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள் நாம் என்று மார்தட்டுவோர் குளிர்ந்த நீர் உள்ள அண்டாவில் ஆமைகளை விடுபவர்கள் போல் என்றுணர்க மக்களே!

# யாழ்ப்பாண மாநகர முதல்வர் தெரிவுக்கு எதிராக சட்டநடவடிக்கை - மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் முதல்வர் தெரிவு சட்ட விரோதமாக இடம்பெற்றிருப்பதால் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உட்பட அனைத்து சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளவுள்ளதாக முன்னாள் மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார். வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகர சபைக்கு முதல்வர் தெரிவாகியுள்ளதாக ஊடகங்களிலும் வர்த்தமானி பிரசுரத்திலும் யாழ். மாநகர சபையின் முதல்வராக இம்மானுவேல் ஆனோல்ட் நியமித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபையின் முதல்வர் தொடர்பில் ஆரம்பம் தொட்டு சட்டவிரோதமாக செயற்பட்ட விடயமாகவே கருதுகின்றேன்.

இது திட்டமிட்ட நோக்கத்துடன் தங்களது தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஒருவரை நியமிக்க வேண்டும் என்கின்ற தேவைப்பாட்டின் அடிப்படையில் மாநகர முதல்வர் தெரிவு இடம்பெற்றிருக்கின்றது என்பதை நான் நம்புகின்றேன்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் சட்டத்தில் சட்ட விதிமுறைகளை மீறி சட்ட விரேதமாக அறிவிப்பு வெளியாகியது பின்னர் ஒரு தேர்தல் நடைபெற்றது. உள்ளூராட்சி மன்றத்தின் சுற்றுநிரூபம் ஒன்றில் இரண்டு முறைகள் வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து வெல்ல முடியாது பதவி இழந்த ஒருவர் மீண்டும் பதவிக்கு போட்டியிடக்கூடாது என்று சுற்று நிரூபம் இருக்கின்றது.

அந்த சுற்று நிரூபத்தை மீறி யாழ் மாநகர சபையின் முதல்வராக இம்மானுவேல் ஆனோல்ட்டின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது.

அதன் பின்னர் உறுப்பினர்கள் வெளியேறிய பின்னர் நிறைவெண் காணாது என உள்ளூராட்சி ஆணையாளர் கூட்டத்தை ஒத்திவைத்து வெளியேறிய பின்னர் இப்பொழுது மோசடியாக சட்ட விரோதமாக ஒருவர் யாழ். மாநகர சபையின் முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதிலே பெருமளவு இலஞ்ச ஊழல் இடம்பெற்றிருக்கின்றதோ என எண்ணத்தோன்றுகின்றது.

எனவே இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்வதில் இருந்து அனைத்து விதமான சட்ட நடவடிக்கைகளையும் இந்த சட்டவிரோத செயற்பாடுகள் நடக்கலாம் என்றால் யாழ்ப்பாணத்திலே சட்டங்கள் தேவையில்லை.

சட்டப்புத்தகங்களை குப்பையிலே எறிந்து விட்டு இந்த முதல்வர் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே இலஞ்ச ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்வதிலிருந்து தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தயாராகி வருகின்றோம்.

கடந்த சில வாரங்களாக உள்ளூராட்சி மன்ற வேட்பு மனு தயாரிக்கும் வேலைப் பளுவினால் இயங்கிக் கொண்டிருந்தமையினால் சில வழக்குகளை தாக்கல் செய்ய முடியாத நிலை இருந்தது.

தற்போது இந்த வேலைப் பளுக்கள் குறைவடைந்துள்ளது உடனடியாக நீதிமன்றத்தை நாடி சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்றார். (ம-7)

# தேர்தலை தாமதப்படுத்த ஜனாதிபதி பல்வேறுமுயற்சி

## ஜே.வி.பி தலைவர் அநுர

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலை தாமதப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுக் கூட்டத்தில் உரை யாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடத்தப்பட்டால் மின்வெட்டு, மருந்து தட்டுப்பாடு போன்றவை ஏற்படும் உள்ளிட்ட பல்வேறு காரணங்களை கூறி அரசாங்கம் தேர்தலை தாமதப்படுத்துகிறது.

அவர்கள் திறைசேரி செல்வத்தை அதிகரிக்க விரும்பவில்லை. இது நடந்தால் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும். எனவே, அவர்கள் நீண்ட காலம் ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதற்காக திறைசேரியை குறைத்துக் கொண்டே இருக்கிறார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சவுதி அரேபியாவுக்கு விஜயம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சவுதி அரேபியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய அமைச்சர் அலி சப்ரி எதிர் வரும் 23 ஆம் திகதி சவுதி அரேபியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

சவுதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான் அல் சௌதின் அழைப்பின் பேரில் அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்த கலந்துரையாடல்களில் அவர் ஈடுபடவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி, இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு, வளைகுடா ஒத்துழைப்பு பேரவை மற்றும் மக்கா மற்றும் மதீனா ஆளுநர்களையும் அமைச்சர் அலி சப்ரி சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# உயர்தரப் பரீட்சை காலத்தில் இரவு 7 மணிக்குப் பின்னர்

## மின்வெட்டு அமுலாகாது

(கொழும்பு)

2022 ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் இரவு 7.00 மணிக்குப் பின்னர் நாளாந்தம் மின்வெட்டு நடை முறைப்படுத்தப்படமாட்டாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தரவின் கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சைக் காலத்தில் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவதற்கு 5 பில்லியன் ரூபாய் தேவைப்படுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜசேகர அண்மையில் அமைச்சரவைக்கு அறிவித்திருந்தார். எவ்வாறாயினும், குறித்த 14 நாட்களுக்கும் தொடர்ந்து மின்சாரம் வழங்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, எதிர் வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அத்துடன், பரீட்சை சிக்கல்கள் மற்றும் முறைகேடுகள் குறித்து அறிவிப்பதற்காக 1911 என்ற அவசர இலக்கத்துக்கோ அல்லது 0112 784 537, 0112 786 616, 0112 784 208 மற்றும் 0112 785 211 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்க முடியும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு நாளை 23 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு கர்மாரம்பமும் மறுநாள் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை எண்ணெய்க்காப்பு வைபவமும் அதனைத் தொடர்ந்து எதிர் வரும் 26 ஆம் திகதி மகா கும்பாபிஷேகமும் இடம் பெறவுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபை தேர்தல்

## அரசின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்

### ஜே.வி.பி தலைவர் அநுர

(கொழும்பு)

**"உள்ளூராட்சி சபைத் தேர்தல் அரசின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும். அதனாலேயே அரச தரப்பினர் இந்தத் தேர்தலுக்கு அஞ்சுகின்றார்கள். தேர்தல்கள் ஆணைக்குழு அரசின் தேவைக்கு ஏற்பவே செயற்படுகின்றது." என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டினார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், "உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால், ரணில் தேர்தலை ஒத்திப்போடுவதற்கே முயற்சி செய்கின்றார். அரசமைப்பில் அதற்கு இடமில்லை. இதனால் தேர்தல் நடத்தப்படவே வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழு அரசின் தேவைக்கு ஏற்பவே செயற்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை இல்லை. 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கிடைத்த 69 இலட்சம் வாக்குகளும் ரணிலுக்கு எதிரான வாக்குகள். அப்படியாயின் ரணிலால் எப்படி ஜனாதிபதியாக இருக்க முடியும்?

சோமாலிய நாட்டு கடற் கொள்ளையர்கள் கப்பலைப் பிடித்து வைத்திருப்பது போல் இங்கு திருடர்கள் இலங்கையைப் பிடித்து வைத்துள்ளார்கள். நாட்டை ஆட்சி செய்கின்றார்கள். இவர்களுக்கு மக்கள் ஆணை இல்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தினால் அவர்களின் நிலை என்னவென்று தெரியவரும். அவர்கள் படுதோல்வியடைவார்கள் என தெரிவித்தார். (4)

# அரசியலமைப்பு சபைக்கு 3 பிரதிநிதிகள் நியமனம்

(கொழும்பு)

அரசியலமைப்பு சபைக்கு மூன்று வருட காலத்திற்கு மூன்று பிரதிநிதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, கலாநிதி பிரதாப் ராமானுஜம், கலாநிதி தில்குஷி அனுலா விஜேசுந்தர மற்றும் கலாநிதி வெலிகம விதான ஆராச்சிகே தினேஷா சமரரத்ன ஆகியோர் அரசியலமைப்பு சபை உறுப்பினர்களாக கடமையாற்றவுள்ளனர். (4)

# பாடப் புத்தகங்கள் அச்சிடும் நடவடிக்கைகள் இடைநிறுத்தம்



(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள் அச்சிடும் நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் இந்த ஆண்டில் திட்டமிட்டவாறு பாடப் புத்தகங்களை விநியோகம் செய்ய முடியாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்காக விலை மனுக் கோரல் மூலம் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கான முற்பணம் மற்றும் புத்தகங்கள் அச்சிடப்பட்டதன் பின்னர் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் என்பன இதுவரையில் வழங்கப்படவில்லை.

பாடப் புத்தகங்கள் அச்சிடுவதற்கான நிறுவனங்களுக்கு முற்பணமாக 20 வீத கொடுப்பனவு வழங்குவதாக ஒப்பந்தம் செய்யப்பட்டு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் கொடுப்பனவுகளை உரிய முறையில் வழங்கத் தவறியதனால் அச்சு நிறுவனங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (4)

# நுவரெலியா நானுஓயா வீதியில் கனரக வாகனங்கள் பயணிக்கத் தடை

(கொழும்பு)

நுவரெலியா, ஹற்றன் பிரதான வீதியில் நானுஓயா குறுந்தொகை வீதியில் கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை முதல் குறித்த நடைமுறை செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்துள்ளார்.

குறித்த செங்குத்தான வீதியில் அதிகளவு விபத்துக்கள் இடம்பெறுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குறித்த பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 3 சிறுவர்கள் அடங்கலாக 7 பேர் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4)

# சீன சுற்றுலாப் பயணிகளுக்கான முன்னோடித் திட்டத்தில் இலங்கை

(கொழும்பு)

சீன சுற்றுலாப் பயணிகளுக்காக சீனா மீண்டும் ஆரம்பித்துள்ள முன்னோடித் திட்டத்தில் இலங்கையும் இணைக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து, இந்தோனேஷியா, கம்போடியா, மாலைத்தீவு, இலங்கை, பிலிப்பைன்ஸ் ஆகிய 20 நாடுகளுக்கு சீனர்கள் வெளிச்செல்லும் முன்னோடித் திட்டத்தை சீன கலாச்சார மற்றும் சுற்றுலா அமைச்சு அறிவித்துள்ளது.

3 வருடங்களின் பின்னர் வெளியாகிய இந்த அறிவிப்பில் இலங்கையும் இணைக்கப்பட்டுள்ளமையானது இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்த உதவும் என சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

மேலும், இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப இது உதவும் என்றும் சீன தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

சீன கலாச்சாரம் மற்றும் சுற்றுலா அமைச்சகத்தின் தரவுகளின்படி 2019ஆம் ஆண்டில் 155 மில்லியன் சீனர்கள் வெளிநாடுகளுக்கு பயணங்களை மேற்கொண்டுள்ளனர். (4)

# இலங்கையர்கள் 14 பேருக்கு சிறை விதித்தது பிரான்ஸ்

(கொழும்பு)

வடக்கு பிரான்ஸில் தங்கியிருந்த 14 இலங்கையர்களுக்கு பிரான்ஸ் நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

ஐரோப்பா உட்பட பல நாடுகளில் மனிதக் கடத்தல் செயற்பாடுகளை மேற்கொண்டமை காரணமாக அவர்கள் சிறை வைக்கப்பட்டனர்.

இந்த செயற்பாடுகள் தற்போது ஐரோப்பிய கண்டம் முழுவதும் ஒரு இலாபகரமான வர்த்தகமாகமாறியுள்ள குற்றவியல் வலையமைப்புகளை ஒடுக்கும் முயற்சி யின் ஒரு கட்டமாகும்.

இந்த மோசடியை மேற்பார்வை செய்து வந்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ள பிரான்ஸின் செரிஃபோன்டைன் கிராமத்தில் கடையொன்றை நடத்தி வந்த முக்கிய சந்தேக நபருக்கு நான்கு ஆண்டுகள் சிறையும், ஓராண்டு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளின் குடியேற்றவாசிகளை உக்ரைனில் இருந்து ஐரோப்பாவிற்கு கொண்டு செல்வதற்கான கட்டணங்களையும், வழிகளையும் நிர்ணயிப்பதற்காக கிழக்கு ஐரோப்பாவில் உள்ள எல்லை அதிகாரிகளுக்கு குறித்த நபர் இலஞ்சம் வழங்கியதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட மற்றைய இலங்கையர் ஒருவர் பிரித்தானியாவில் நாடு கடத்தல் உத்தரவுக்கு எதிராக போராடியவர் என்பதுடன், அவருக்கு ஐந்து வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மற்றையவர்களுக்கு குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 240 | 400 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 350 | 400 |
| தக்காளி | 250 | 200 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 200 |
| கோவா | 70 | 80 | 120 | 100 |
| கரட் | 200 | 200 | 240 | 200 |
| பூசணி | 80 | 140 | 140 | 150 |
| புடோல் | 150 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 50 | 200 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 650 | 500 | 850 | 600 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 300 | 400 | 380 | 400 |
| வெண்டிக்காய் | 250 | 250 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 150 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 500 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 350 | 320 | 400 |
| கறிமிளகாய் | 700 | 700 | 700 | 700 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1200 | 1500 |
| போஞ்சி | 300 | 350 | 320 | 350 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | — | 350 |
| கீரை - 1 பிடி | 140 | 80 | 200 | 150 |
| தேசிக்காய் | 100 | 60 | 200 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 350 | 350 | 300 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 500 | 600 |
| முள்ளங்கி | 50 | 80 | 120 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 80 | — | 120 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாண் விலை...

நிறையுடைய பாண் ஒன்றின் விலை 10 ரூபாயினால் குறைவடையவுள்ளது.

இந்த தகவலை யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் க.குணரட்ணம் அறிவித்துள்ளார்.

இதன்படி பாண் ஒன்றின் புதிய விலை 180 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## மாநகர முதல்...

நள்ளிரவு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதனின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட 2315/62ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக நேற்று தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தார் என முதல்வரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ம-7)

## மார்ச் 9...

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் பணி நேற்று நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடைந்த நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

இதற்கமைய கடந்த 5ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வரை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், சுயாதீன குழுக்கள் நாடளாவிய ரீதியில் உள்ள மாவட்ட செயலகங்களில் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தின.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பம் கடந்த மாதம் 5ஆம் திகதி முதல் கோரப்பட்டன. விண்ணப்பங்களை ஏற்கும் பணிகள் நேற்றுடன் நிறைவு பெற்றது.

கடந்த 18ஆம் திகதி (புதன்கிழமை) முதல் நேற்று 21ஆம் திகதி வரை வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் உட்பட பெரும்பாலான சுயாதீனக் குழுக்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன.

பிரதான அரசியல் கட்சிகள் கூட்டணி அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ளன. (ம-7)

## முதன்மை வேட்...

முதல்வர் வேட்பாளராக குத்துவிளக்கு சின்னத்தில் போட்டியிடுகிறார்.

கூட்டமைப்பில் பங்காளி கட்சியான ரெலோ சார்பில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கஜதீபனும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணி (மான் சின்னம்) சார்பில் முன்னாள் மாநகர முதல்வர், சட்டத்தரணி வி.மணிவண்ணன் முதல்வர் வேட்பாளராக போட்டியிடுகிறார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி (வீடு சின்னம்) சார்பில் முதல்வர் வேட்பாளராக எவரையும் நியமிக்கவில்லை எனவும் தேர்தலின் பின் தீர்மானிக்கப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி (சைக்கிள் சின்னம்) சார்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முக்கிய நிர்வாகி, ஆசிரியர் திலீபன் திலீசன் களமிறக்கப்பட்டுள்ளார். (ம-7)

## இளம் குடும்பஸ்...

யைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான ர.அஜித் (வயது 30) என்பவரே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 8 மணியளவில் இடம்பெற்றது என்று கோப்பாய் பொலிஸார் கூறினர்.

முகமூடியணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த மூவரே குடும்பத் தலைவரை துரத்திச் சென்று வாளால் வெட்டிக் கொலை செய்து தப்பித்தனர் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33,104)

## யாழில் முக்கிய...

அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

நேற்று இரவு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அம்பலவாணர் சிவபாலசுந்தரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் 157 வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட போது 150 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் 7 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்புமனு வல்வெட்டித்துறை நகர சபை மற்றும் வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்புமனு வேலணை பிரதேச சபையில் முழுமையாகவும் வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபையில் பகுதியளவிலும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்புமனு வேலணை பிரதேச சபையில் முழுமையாகவும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் பகுதியளவிலும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனு ஊர்காவற்றுறை பிரதேச சபையில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

நவ லங்கா நிதஹஸ் பக்ஷயவின் வேட்புமனு வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வேட்புமனு தாக்கல் செய்த சுயேட்சை குழுக்களின் எந்த வேட்புமனுவும் நிராகரிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## தேர்த...

மனுக்களை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் கையளித்தபின்னர் ஊடகவியாளர்கள் சந்திப்பின் பின்னர் இக்கருத்தினை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் தனியாக வேறாக போட்டியிடுகின்றது. இந்தத் தேர்தல் முறையிலே கட்சிகள் தனித் தனியாக போட்டியிடுவது சாலச் சிறந்தது அது இலங்கை தமிழரசுக் கட்சியுடைய கருத்தாக இருக்கின்றது.

இதன் முடிவுகள் வரும்போது நாங்கள் சேர்ந்து கூட்டமைப்பாக இருப்பதை இருந்து காட்டுவோம்.

நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தலிலே நாட்டிலே எப்படியாவது அரசியல் சூழ்நிலை மாறியிருக்கின்றதை சோதித்துப் பார்க்கின்ற தருணமாக இருக்கின்றது. தெற்கிலே பாரிய மாற்றங்கள் உருவாகலாம் என எதிர்பாக்கப்படுகிறது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையிருக்கின்ற கட்சிக்கு மக்கள் ஆதரவு இல்லை என்று சொல்லப்படுகின்றது.

அங்கு மாற்றங்கள் நிகழலாம் வடக்கிலும், கிழக்கிலும் பிரதான கட்சி இலங்கை தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை முன்னெடுக்கின்ற தாய்வீடு அதனை மக்கள் ஜனநாயக ரீதியான தீர்ப்பின் மூலம் வழங்கவேண்டும் என்றார். (ம-7,33,104)

# குற்றச்சாட்டை நிராகரித்தார் கோட்டா

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 19 அரச வாகனங்களை தனிப்பட்ட பாவனைக்கு பயன்படுத்துவதாக ஊடகங்களில் வெளியான செய்திகளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

இந்த வாகனங்கள் முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், தனிப்பட்ட பாவனைக்காக அல்ல எனவும் முன்னாள் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 21/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1462
மகரம் 7 3 6 0 8 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.01.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1037
O 19 38 51 64
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.01.21
சீட்டிழுப்பு இலக்கம் 3249
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
C 16 22 26 33
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 21/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1355
A 15 06 30 60 75

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.21
சீட்டிழுப்பு இலக்கம் 316
மிதுனம் 14 38 59 61 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/01/21
சீட்டிழுப்பு இலக்கம் 5007
V 7 8 7 4 2 9

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1982 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.01.21 தினம் சனிக்கிழமை
H 33 49 56 65
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,437,420/-
DLB

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.21
சீட்டிழுப்பு இல : 4143
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,557,600/-
வெற்றி இலக்கங்கள் 19 30 45 51 D
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,425,850/-
வெற்றி இலக்கங்கள் 04 15 54 59
திகதி 2023-01-21
வெற்றி வாரம் 3694
வர்ணம் இள நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,039,880/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 12 01 20 42 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 299,836,922.20
சீட்டிழுப்பு வாரம் 1158
சிவப்பு
2023.01.21 சனிக்கிழமை
DLB Web : www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 564 திகதி 2023-01-21 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 12 41 54 விதி எண் 02
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 16,305,564/-
DLB DEVELOPMENT LOTTERIES Web: www.dlb.lk

அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1808
சீட்டிழுப்பு திகதி : 2023.01.21
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,109,800/-
17 29 32 60 T
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

வெலிக்கடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொத்தடுவ வீதி மஹனியர சந்தி பகுதியில் உள்ள கடை ஒன்றுக்குள் புகுந்த ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத இருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 56 வயதுடையவர்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

வெலிக்கடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


## இராஜ மருத்துவம்

பேரறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர்

மீண்டும் யாழ்ப்பாணத்தில் பக்கவாதம், மூட்டுவாதம், சூதகவாயு, நெஞ்சுக்குத்து, நெஞ்சடைப்பு, பாலியல் குறைபாடுகள், தொய்வு, நீரிழிவு, நித்திரையின்மை, மன நோய், நோவு, விஷக்கடிக்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள. 076 274 4488

வல்லை வீதி, சங்கானை. (C-5826)

## விற்பனைக்கு

- சங்கரத்தையில் 4அறைகளுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்கு.
- நல்லூரடியில் வீடு விற்பனைக்கு

Contact Number
Sailakshan Uthayasoorian
+94 77 221 5531
(14358)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 43 வயது மணமகனுக்கு மணமகள் தேவை விவாகரத்து ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு :
077 905 8615
(வைபர் & வாட்ஸ்ஆப்) (14359)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970 (14288)

## விற்பனைக்கு

Bajaj Boxer 2004 Model, சிவப்பு நிறம் சிறந்த பராமரிப்பில்

தொடர்பு :-
076 479 3526 (14365)

## தேவை

கல்வி ஸ்தாபனம் ஒன்று ஆரம்பிப்பதற்கு 2500/3000 Sq,Ft இடம் அல்லது 3 Room வீடு தேவை. சுன்னாகத்தை அண்டிய பகுதிகள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு :
070 686 7695 / 077 230 6642 (14355)

## வேலையாள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள கடை ஒன்றுக்கு சாடி, சிலைகள், வெயின்ற்பண்ணக்கூடிய அனுபவம் உள்ள ஆண் ஒருவர் தேவை.

077 836 2408
076 826 7697 (14356)

## தொழிலாளர் ஒப்பந்தக்காரர்கள் தேவை

ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு இயக்கச்சியில் இயங்கி வரும் முருங்கைத் தோட்டத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் தோட்ட வேலைகள் செய்வதற்கு தொழிலாளர் ஒப்பந்தக்காரர்கள் தேவை.

- தரமான தொழிலாளர்களை தம் வசம் கொண்டுள்ளோர் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.
- வேலை அளவு, ஒப்பந்த தொகை நேரில் பார்வையிட்டபின் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு உதவி முகாமையாளர்,
வரையறுக்கப்பட்ட ஹெரிடேஜ் அக்ரி, இயக்கச்சி.
077 118 8361 (14336)

## காணியும் வீடும் விற்பனைக்கு

காங்கேசன்துறை யாழ்ப்பாணப் பிரதான வீதியில் பொலிஸ் ஆஸ்பத்திரிக்கு எதிர்ப்பக்கமாக குரு வீதிக்கு அருகாமையில் தெற்கு பக்கம் இரண்டு பரப்பு காணியும் தற்போது உபயோகத்தில் உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 353 5822 / 071 860 6576 (14320)

## வான் விற்பனைக்கு

EVERY SUZUKI JAPAN
உற்பத்தி வருடம் 2015
முதற்பதிவு 2019
விலை 43 இலட்சம்

074 292 5923 (14340)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை 675,000 ரூபாய் மட்டும்

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

077 814 7389, 077 986 5457 (14360)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு.

(நிலப்பரப்பு)

- ஆதிசிவன் முத்துமாரி அம்மன் கோவில் வீதியில்.
- இரண்டு இரண்டு பரப்புக்களாக பிரிக்கப்பட்டுள்ளது.
- தென்மராட்சி கலைமன்றம் 100 மீ தூரம்.
- அரச வங்கி, தனியார் வங்கி 200 மீ தூரம்.
- சாவகச்சேரி சந்தை, பஸ் நிலையம், புகையிரத நிலையம் 300 மீ தூரம்.
- அமைதியான சூழல், நல்ல தண்ணீர்.




பார்வையிடும் நேரம் - காலை 8.00 - மாலை 6.00 மணி
விலை பேசித் தீர்மானிக்கப்படும்

077 784 0379 Viber, Whatsapp
077 467 2408, 074 001 5380 (14334)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 42 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன.(பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

077 986 5457, 077 814 7389 (14360)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org